Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

SATURDAY, APRIL 30, 2021

சனிக்கிழமை ஏப்ரல் 30, 2022 | ஒளி: 07 கதிர்: 293 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | Free

## மே.2 பொது விடுமுறை; 1,3 மின்வெட்டு இல்லை



தொழிலாளர்கள் தினமான மே தினம், இம்முறை விடுமுறை நாளில் வருவதால், மறுநாள் 2ஆம் திகதி பொது விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான சுற்றறிக்கையை பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் ஜே.ஜே. ரத்னசிறி, நேற்று (29) விடுத்திருந்தார்.

தொடர்ச்சி P2

## கடன்களை எம்மால் செலுத்த முடியாது

- கடன் மீள் கட்டமைப்பே எமக்குள்ள தெரிவு
- அரசியல் ஸ்திரத்தன்மை மிகவும் அவசியம்
- உலக வங்கியிடமிருந்து 300 மில்லியன் நிதியுதவி கிடைக்கும்
- இரண்டு மாதங்களுக்குள் ஐ.எம்.எப்புடன் ஆரம்பகட்ட ஒப்பந்தம்



இலங்கைக்கு வழங்கிய கடன்களை காலம் தாழ்த்தி மீளப்பெற்றுக்கொள்ள எவருமே விரும்புவதில்லை. ஆனால், இப்போது எம்மால் சர்வதேச கடன்களை மீளச்செலுத்த முடியாது. இவ்வாறான நெருக்கடி நிலையில் கடன் மீள்கட்டமைப்பைத் தவிர்ந்து, எமக்கு மாற்று வழிமுறை எதுவுமே இல்லை. இதில் சகல நாடுகளுடனும் ஒரே கொள்கையையே பின்பற்ற நினைக்கின்றோம் என, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலாலா வீரசிங்ஹ தெரிவி

தொடர்ச்சி P2

## ராஜபக்ஷ பரம்பரையே இல்லாத அரசாங்கத்தின் தேவை ஏற்பட்டுள்ளது

### சர்வமதத் தலைவர்கள் கூட்டாக வலியுறுத்தினர்

ஜனாதிபதியும் பிரதமரும் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்பதே மக்களின் கோரிக்கையாகும். ராஜபக்ஷர்கள் இல்லாத புதிய அரசாங்கம் ஒன்றினை உருவாக்க வேண்டிய கட்டாயம் இன்று உருவாகியுள்ளது. எனவே ராஜபக்ஷர்கள் அதிகாரத்தை விட்டு வெளியேற வேண்டும். அதுவே சிறந்ததாகும் என சர்வ மதத் தலைவர்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்.

தற்போதைய நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கான மதத் தலைவர்களின் ஆலோசனைகளை வழங்கும் விதமாக நேற்று கொழும்பில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர்கள் இதனை வலியுறுத்தினர். இதன்போது சர்வமதத் தலைவர்கள் சுட்டிக்காட்டிய விடயமானது,

தொடர்ச்சி P2

## சகல கட்சிகளும் இணங்கினால் இடைக்கால அரசாங்கம்

### புதிய பிரதமர் தலைமையில் பயணிக்க தயார் என்கிறார் ஜனாதிபதி

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல அரசியல் கட்சிகளும் இடைக்கால அரசாங்கத்தை அமைக்க இணக்கம் தெரிவிப்பார்கள் என்றால், உடனடியாக இடைக்கால அரசாங்கத்தை அமைக்க தயார் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளதாகவும், புதிய பிரதமரின் தலைமையின் கீழ் புதிய அமைச்சரவையை உருவாக்கும் தனது விருப்பத்தையும் ஜனாதிபதி வெளிப்படுத்தியுள்ளதாகவும் அரசாங்கத்தின் சுயாதீன குழுவினர் தெரிவிக்கின்றனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் அரசாங்கத்தின் சுயாதீன குழுவினருக்கும் இடையில் நேற்று (29) இடம்பெற்ற விசேட சந்திப்பின் பின்னர் ஊடக சந்திப்பொன்றை நடத்தி, கருத்துத் தெரிவிக்கும் போதே ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன இதனை தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## சீனா இணங்காவிடின் இலங்கைக்கே பேராபத்து



நாட்டின் சொத்துகளை அபகரிக்கும் சீனாவின் உபாயமார்க்கத்திற்குள் இலங்கை சிக்கிக்கொண்டுள்ள காரணத்தால் அவர்களின் கோரிக்கைகளுக்கு இணங்க வேண்டிய நிலைமை ஏற்படும் எனவும், பொருளாதார நிபுணரும் மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநருமான டப்ளியூ.ஏ.விஜேவர்தன தெரிவித்தார்.

ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி அடையாது இருக்க வேண்டுமாயின் எமது வெளிநாட்டு கையிருப்பு உறுதியாக இருக்க வேண்டும். ஆனால், நாட்டின் வெளிநாட்டு கையிருப்பு பூச்சியமாக மாறியுள்ளது.



## அலரிமாளிகைக்கு முன்பாக ஆர்ப்பாட்டக்காரர் மீது தாக்குதல்

### ‘தற்பாதுகாப்புக்கே தாக்கினோம்” –பொலிஸ்

அரசாங்கத்துக்கு எதிரானதும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை வீட்டுக்குச் செல்லுமாறு வலியுறுத்தியும் கொள்ளுப்பிட்டி அலரிமாளிகைக்கு முன்பாக இடம்பெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டிருந்தவர்களில் ஒருவர் மீது, பொலிஸார் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தொடர்ச்சி P2

## பொருளாதார பிரச்சினைக்கு நாம் தீர்வு வழங்குவோம்

### பிரதமர் மஹிந்த என்னிடம் தெரிவித்தார் என்கிறார் மனோ



“இன்று நாட்டில் நிலவுவது பொருளாதார பிரச்சினைதான். எமக்கு நட்பு நாடுகள் உதவும். பிரச்சினைகளுக்கு நாம் பொருளாதார தீர்வு வழங்குவோம். மக்களின் பொருளாதார பிரச்சினைகள் தீர்ந்து விட்டால், இந்த ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் ஓய்ந்து போய் விடும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, என்னிடம் தெரிவித்தார்” என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## வெளிநாட்டு பணியாளர்களின் உதவித்தொகையாக 37 ஆயிரம் அமெரிக்க டொலர் கிடைத்துள்ளது

### மத்திய வங்கி தெரிவிப்பு

■ நமது நிருபர்

இலங்கையின் டொலர் பற்றாக்குறையை அடுத்து, வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களை நிதியுதவி செய்யுமாறு நாம் விடுத்த கோரிக்கைக்கு அமைய, 37 ஆயிரம் அமெரிக்க டொலர் மத்திய வங்கிக்கு இதுவரையில் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவித்த மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசின்ஹ, வெளிநாடுகளில் இருந்து பணம் அனுப்பும் போது வங்கிக் கட்டமைப்பின் ஊடாகவே அனுப்புமாறும் வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2




## ஸ்டாலினின் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது

### இலங்கை மக்களுக்கு உதவ எப்போதும் தயார் எனவும் சட்டசபையில் அறிவித்தார்

பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள இலங்கை மக்களுக்கு உதவ, இந்திய மத்திய அரசாங்கத்தின் அனுமதியைக் கோரிய தமிழக அரசின் தீர்மானம், தமிழக சட்ட சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. குறித்த தீர்மானத்தை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்மொழிந்திருந்த நிலையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் பாரதிய ஜனதா கட்சியின் ஒத்துழைப்புடன் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

தொடர்ச்சி P2



## அரசியல் அமைப்பையே ஆயுதமாக பயன்படுத்துவோம்

### அண்ணன், தம்பி பிரச்சினையை வீட்டில் தீர்த்துக்கொள்ளுங்கள்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவியில் இருந்து நீக்குவதற்கு அரசியலமைப்பில் பல சாதகத்தன்மைகள் உள்ளதாகவும் அவற்றை ஆயுதமாகப் பயன்படுத்த ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இருப்பதாகவும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

நாங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை பலத்தை ஒன்று திரட்டி வருகின்றோம். ஆட்சி முறைமையை மாற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம். இதனால்,

தொடர்ச்சி P2




## கேகாலை எஸ்.எஸ்.பிக்கு மே.6 வரை விளக்கமறியல்

ரம்புக்கனையில் பொலிஸாரால் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், ஒருவர் உயிரிழந்த சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட கேகாலைக்குப் பொறுப்பான முன்னாள் சிரேஸ்ட் பொலிஸ் கண்காணிப்பாளர் (எஸ்.எஸ்.பி), மே மாதம் 6ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## அரசாங்கத்துக்குள் மூன்று அணிகள்

### பொது இணக்கத்தை எட்டுவது கடினம் என்கிறார் வாசு



ஜனாதிபதியுடன் ஓர் அணியும், பிரதமருடன் ஓர் அணியும், சுயாதீனமாக ஓர் அணியுமாக அரசாங்கத்துக்குள் மூன்று அணிகள் இருக்கின்றன. இந்த மூன்று அணிகளுக்கு இடையிலும் பொது இணக்கப்பாடு ஒன்றை எட்ட முடியாதுள்ளதாக ஆளுந்தரப்பு சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவிக்கின்றார். பிரதமரோ ஜனாதிபதியோ பதவி விலகுவதாகத் தெரியவில்லை எனவும் அவர் கூறினார்

தொடர்ச்சி P2

## ஆசிரிய உதவியாளர்கள் ஆசிரியர் சேவையில் இணைப்பு

மத்திய மாகாண பாடசாலைகளில் சேவைபுரியும் ஆசிரிய உதவியாளர்கள், இலங்கை ஆசிரியர் சேவையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இதற்கான நிகழ்வு எதிர்வரும் மே மாதம் 3 ஆம் திகதி, மத்திய மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பிலான உத்தியோகபூர்வ அறிவிப்பு, மத்திய மாகாண பிரதான மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் ஜி.எச்.எம்.ஏ. பிரேமசிங்கவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

PAGE 1 தொடர்ச்சிகள்

## ராஜபக்ஷ...

நாடு முழுவதும் மக்கள் வரிசையில் நிற்கின்றனர், சிறுவர்களுக்கு தேவையான பால்மா, உணவுகள் இல்லை, மக்களுக்கு தேவையான மருந்துகள் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது, மின்சாரம் இல்லாது மக்கள் வீடுகளில் இருக்க முடியாதுள்ளது. இவ்வாறு பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் மக்கள் வாழ வேண்டியுள்ளது. அரசாங்கத்தை எதிர்த்து

மக்களின் போராட்டம் ஒரு சில நாட்களில் முடிந்துவிடும் என்ற நினைப்பில் ஆட்சியாளர்கள் இனியும் இருக்கக்கூடாது. இன்றைய நிலைமைக்கு காரணமான ஆட்சியாளர்கள் தயவு செய்து ஆட்சியை கைவிட்டு வெளியேறி, பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக்கொடுக்கக்கூடிய நபர்களிடத்தில் நாட்டை ஒப்படைக்க வேண்டும்.

இது அரசியல் செய்யும் நேரம் அல்ல, நாட்டின் உண்மையான நிலைமைகளை இனியாவது ஆட்சியாளர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். இவ்வாறான மோசமான நிலையொன்று உருவாகும் என

**❝ ராஜபக்ஷ பரம்பரையே இல்லாத புதிய அரசாங்கம் ஒன்றினை உருவாக்க வேண்டிய கட்டாயம் இன்று உருவாகியதுள்ளது. எனவே ராஜபக்ஷவினர் அதிகாரத்தை விட்டு வெளியேற வேண்டும் எனவும் தாம் வலியுறுத்துவதாக கூறினார்.**

நிபுணர்கள் சுட்டிக்காட்டினர். ஆனால் அரசாங்கம் அதனை சிறிதும் கருத்தில் கொள்ளவில்லை. இன்று நாட்டையே நாசமாக்கும் அளவுக்கு நிலைமைகள் மோசமடைந்துள்ளன. இனியும் இவர்கள் ஆட்சியில் இருந்து நாட்டை நாசமாக்காது ஜனாதிபதியும், பிரதமரும் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்பதே மக்களின் கோரிக்கையாகும். ராஜபக்ஷ பரம்பரையே இல்லாத புதிய அரசாங்கம் ஒன்றினை உருவாக்க வேண்டிய கட்டாயம் இன்று உருவாகியதுள்ளது. எனவே ராஜபக்ஷவினர் அதிகாரத்தை விட்டு வெளியேற வேண்டும் எனவும் தாம் வலியுறுத்துவதாக அவர்கள் கூறினார்.

# கடன்களை எம்மால் செலுத்த முடியாது

இலங்கையின் கடன் மீள் கட்டமைப்பு வேலைத்திட்டம் குறித்து தெளிவுபடுத்தும் விதமாக நேற்று(29) கொழுப்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார். அவர் மேலும் கூறுகையில்.

சர்வதேச கடன் சலுகைகளை பெற்றுக்கொள்வது குறித்து பாரிஸ் கிளப் மற்றும் அதனை சாராத இந்தியா, சீனா ஆகிய சகல தரப்புடனும் கலந்துரையாடல் முன்னெடுக்கப்படும். அதேபோல் சர்வதேச நாணய நிதியத்துடனும் கலந்துடையாடி வருகின்றோம். அடுத்த இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குள் அதிகாரிகள் மட்ட அல்லது ஆரம்பகட்ட ஒப்பந்தம் ஒன்றினை முன்னெடுக்க முடியும். அதேபோல் அடிப்படை உடன்படிக்கை முடிந்தவுடன் அடுத்த இரண்டு வாரங்களில் முதற்கட்ட பண பரிமாற்றலை முன்னெடுக்க முடியும். இந்திய கடன் உதவியின் கீழ் பெற்றுக்கொள்ளும் நிதி உதவியை மேலும் அதிகரிக்கும் விதமாக பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதில் சாதகமான நிலைமைகள் காணப்படுகின்றன. அதையும் தாண்டி வெவ்வேறு சர்வதேச முதலீடுகளை பெற்றுக்கொள்ள முயற்ச்சிக்கின்றோம். நாட்டில் முழுமையான நிதிக்கொள்கைக்கான வரைபு ஒன்றை தயாரிப்பதற்கு தேவையான மறுசீரமைப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் சாதகமான நிலையை ஏற்படுத்திக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அதேபோல் கடன் மீள் கட்டமைப்பு விடயத்தில் சகல நாடுகளுடனும் ஒரே விதமான நிலைப்பாட்டையே நாம் கொண்டுள்ளோம். எனவே பேச்சுவார்த்தை மூலமாக கடன் மீள் கட்டமைப்பை செய்து பின்னர் அதனை செலுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்போம். மேலும் அரசியல் ஸ்திரத்தன்மை மிகவும் முக்கியமானது, அதுவே நாட்டின் செயற்பாடுகளை தீர்மானிக்கும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால் கடந்த இரண்டு மூன்று வாரங்களில் நாமும் சில தீர்மானங்களை எடுத்துள்ளோம்.

சமூக நிவாரண தேவைக்கமைய உலக வங்கியுடன் கலந்துரையாடியதற்கு அமைய அவரச தேவைகளுக்கான நிதியின் கீழ் 300 மில்லியன் டொலர் ஒதுக்கீடுகளை வழங்க இணங்கியுள்ளனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்க இந்த நிதி பயன்படுத்தப்படும். அடுத்த மாதத்தில் இருந்து இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும். குறைந்த வருமானத்தை கொண்ட பாதிக்கப்பட்ட மக்களுக்காக இந்த நிதி நிவாரணம் வழங்கப்படும் என்றார்.

## சகல கட்சிகளும் இணங்கினால் இடைக்கால அரசாங்கம்

அவர் மேலும் கூறுகையில், அடுத்த தேர்தலை நடத்துவம் வரையில் தற்காலிகமாக ஒரு அரசாங்கத்தை அமைப்பதன் நோக்கத்தையே இது வெளிப்படுத்தியுள்ளதாகவும், இதனை சர்வகட்சி அரசாங்கம் என்றோ அல்லது இடைக்கால அரசாங்கம் என்றோ கூற முடியும் எனவும் தெரிவித்த அவர், யார் அரசாங்கத்தின் தலைவர், அரசாங்கம் யாருடையது என்பது எமது பிரச்சினை அல்ல, நாட்டு மக்கள் எதிர்கொண்டாலும் இன்றைய நெருக்கடி நிலைமைகளை தீர்க்க ஒரு தலைமைத்துவம் வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும் என்றார்.

எனவே சர்வகட்சி அரசாங்கம் ஒன்றினை உருவாக்குவது குறித்த ஜனாதிபதியின் நிலைப்பாட்டை எழுத்துமூலம் சகல கட்சிகளுக்கும் ஜனாதிபதி அனுப்பிவைப்பார். அதேபோல் புதிய பிரதமரின் தலைமையின் கீழ் புதிய அமைச்சரவையை உருவாக்கும் தனது விருப்பத்தையும் ஜனாதிபதி வெளிப்படுத்தியுள்ளார். 15 -20 பேரைக் கொண்ட அமைச்சரவையும், தேசிய சபை ஒன்றினை உருவாக்கும் இணக்கத்திற்கும் ஜனாதிபத்தை வந்துள்ளார். இதில் முக்கிய தீர்மங்கள் எடுக்கவும், பிரதமர் மற்றும் அமைச்சரவை குறித்த தீர்மானங்கள் எடுக்கவும் தேசிய சபையில் தீர்மானம் எடுக்கப்படும் எனவும், இது சர்வகட்சி உறுப்பின்பர்களை கொண்டதாகவும் இருக்கும் என்ற யோசனைகளையும் முன்வைக்கப்பட்டுள்ளது என்றார்.

## சீனா இணங்காவிடின் இலங்கைக்கே பேராபத்து

இது இப்போதைய நிலைமையை விடவும் பாரிய நெருக்கடிகளை எதிர்காலத்தில் உருவாக்கப்போகின்றது. ஏற்கனவே பாரிய கடன் நெருக்கடியில் உள்ளோம். வெகு விரைவில் வெளிநாட்டு கையிருப்பை அதிகரித்தால் மட்டுமே சமாளிக்க முடியும்.

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் நிதி உதவிகளை செய்ய வேண்டும், சுயமாக நாட்டின் நிலைமைகளை உணர்ந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அதேபோல் முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வர வேண்டும். வெவ்வேறு துறைசார் முதலீட்டாளர்கள் இலங்கைக்குள் வருவதனால் நிலைமைகளில் இருந்து மீள் முடியும் என்றார்.

மேலும் இலங்கையின் கடன் மீள் கட்டமைப்பு விடயத்தில் சீனா இணக்கம் தெரிவிக்காது போனால் ஏனைய நாடுகளும் அதற்கு ஏற்றால் போல் செயற்படும் நிலைமையே ஏற்படும். இது இலங்கைக்கே பாரிய நெருக்கடியை உருவாக்கும். எனவே கடன் மீள் கட்டமைப்பு குழுவிற்கு மிகப்பெரிய நெருக்கடி நிலையொன்று உருவாகியுள்ளது எனவும் அவர் கூறினார்.

## அலரிமாளிகைக்கு முன்பாக ஆர்ப்பாட்டக்காரர் மீது தாக்குதல்

நேற்று (29) காலை மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதலில், அந்தப் போராட்டக்காரர் மயங்கிவிழுந்துவிட்டார். அலரிமாளிகையின் வாயிலை மறித்து, பொலிஸ் பஸ்கள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. அந்த பஸ்களில், ஆர்ப்பாட்டக்காரர்கள் பதாதைகளை தொங்கவிட்டிருந்தனர்.

அதனை பொலிஸார் அகற்றுவதற்கு முற்பட்டபோதே இருதரப்பினருக்கும் இடையில் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. அதன்போது, ஆர்ப்பாட்டக்காரர் ஒருவரை பொலிஸார் தாக்கியுள்ளனர்.

இந்நிலையில், இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் கருத்துரைத்த பொலிஸ் ஊடகப் பேச்சாளரான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி நிஹால் தல்துவ, “ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தவில்லை. தற்பாதுக்காப்பு நடவடிக்கையையே மேற்கொண்டோம்” என்றார்.

## பொருளாதார பிரச்சினைக்கு...

அரசியலமைப்பு தீர்வு என்பது பெரிய விஷயமல்ல. அதனால் பொருளாதார பிரச்சினைகள் தீரப்போவதில்லை. 20 ஆம் திருத்தத்தை அகற்றி விட்டு 19 ஆம் திருத்தத்தை மீண்டும் கொண்டு வருவதாக நான் சொன்னதும், அதற்கு அமைச்சரவையில் சம்மதம் பெற்றதும் உண்மைதான் என்றும் பிரதமர் தன்னிடம் தெரிவித்தார் என்கிறார் மனோ. ஆனால், அதற்கு மேல் அதற்கு என்ன நடந்தது என எனக்கு தெரியாது. ஒருவேளை அது அமைச்சரவை உப-குழுவில் இருக்கலாம். அதுபற்றி அவசரப்பட தேவையில்லை. அது சாவகாசமாக வரும்போது வரட்டும். முதலில் மக்களின் பொருளாதார பிரச்சினைகளை நான் தீர்க்கிறேன். அப்போது இந்த ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் நின்று விடும் என்றும் பிரதமர் கூறினார்.

இதுபற்றி மனோ கணேசன் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு ள்ளதாவது,

நேற்றிரவு தொலைபேசியில். சபாநாயகர் மஹிந்த யாபாவிடம் பேசி விட்டு, பிரதமர் மஹிந்த ராஜபக்சவை தொடர்பு கொண்டு, “20ம் திருத்தத்தை அகற்றிவிட்டு, 19ம் திருத்தத்தை கொண்டு வருவதாக சொன்னீர்கள். அமைச்சரவையிலும் அனுமதி பெற்றதாகவும் சொன்னீர்கள். ஐக்கிய மக்கள் கூட்டணி சார்பிலும் நாம் அரசியலமைப்பு திருத்த வரைபை வழங்கியுள்ளோம். அதில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை முழுமையாக அகற்றுவது பற்றி கூறப்பட்டுள்ளது. எனினும் அரசாங்கத்தின் வரைபுக்கே முதலிடம் கிடைக்கும். 20ம் திருத்தத்தை அகற்றும் எல்லா முயற்சிகளுக்கும் நாம் ஆதரவளிப்போம். முதற்கட்டமாக, 20ஐ அகற்றிவிட்டு, 19ஐ கொண்டு வருவதையும் நாம் ஆதரிப்போம். ஆகவே நீங்கள் எப்போது உங்கள் சட்ட வரைபை பாராளுமன்றத்துக்கு கொண்டு வருகிறீர்கள்? இது பற்றி சபாநாயகர் மகிந்த யாபாவிடம் பேசினேன். உங்கள் சட்ட வரைபு எப்போது சபைக்கு வரும் என்பது பற்றி, அவர் தனக்கு எதுவுமே தெரியாது என்கிறார்”, என்றும் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

## வெளிநாட்டு பணியாளர்களின்...

மத்திய வங்கியின் ஆளுநர் தலைமையில் நேற்று (29)கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

எமது வங்கிக் கட்டமைப்பில் சர்வதேச கையிருப்பு பற்றாக்குறை நிலையொன்றே காணப்படுகின்றது. வங்கி கட்டமைப்புக்கு வெளியில் உண்டியல் மற்றும் ஹவாலா முறையில் வெளிநாட்டு முதலீடுகள் வருகின்றன. எனினும் அத்தியாவசிய பொருட்களை பெற்றுக்கொள்ள கட்டமைப்பிற்கு அப்பால் கையாள்வதால் அதனை வங்கிக்கட்டமைப்பின் கீழ் கொண்டுவரும் முயற்ச்சிகளை முன்னெடுத்துள்ளோம். இறக்குமதியை செய்ய வேண்டுமானால் அதற்கான நிதியை வங்கிக் கட்டமைப்பின் ஊடாகவே வழங்க வேண்டும். வங்கிக்கட்டமைப்பிற்கு அப்பால் எந்தவித இறக்குமதியையும் செய்ய முடியாது என்ற தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அது குறித்த அறிவிப்புகள் வெளிவரும் என்றார்.

## அரசியல் அமைப்பையே...

இந்த போராட்டத்தில் யார் ஆதரவளிக்கின்றனர், யார் ஆதரவளிக்கவில்லை என்பதை நாங்கள் பகிரங்கப்படுத்துவோம்.

நாங்கள் மக்கள் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வோம். நாங்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தாலும் இந்த மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறோம். ஜனாதிபதிக்கு எதிராக குற்றச்சாட்டு பிரேரணையை கொண்டு வரும் ஏற்பாடுகளும் அரசியலமைப்புச் சட்டத்திற்குள் இருக்கின்றது. நாங்கள் அதனையும் ஆராய்ந்துள்ளோம். அரசியலமைப்புச் சட்டத்தின் 44 வது சரத்திற்கு அமைய ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானத்தையும் கொண்டு வர முடியும். அதனையும் நாங்கள் செய்வோம்.

ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையில் முரண்பாடுகள் காணப்படுகிறது. அது நாட்டுக்கு தேவையில்லை. குடும்பத்தில் இரண்டு சகோதரர்களுக்கு இடையில் பிரச்சினை இருந்தால், அது நாட்டுக்கு பிரச்சினையில்லை. அதனை வீட்டுக்கு சென்று தீர்த்துக்கொள்ளுங்கள் எனவும் அவர் கூறியுள்ளார்.

## கேகாலை எஸ்.எஸ்.பிக்கு மே.6 வரை விளக்கமறியல்

ரம்புக்கனை சம்பவத்துக்கு உத்தரவிட்டவர்கள் மற்றும் துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொண்ட பொலிஸ் அதிகாரிகளை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கேகாலை நீதவான் நீதிமன்றம் அண்மையில் கட்டளையிட்டிருந்தது.

அதன்பிரகாரம் குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள், கேகாலைக்குப் பொறுப்பான முன்னாள் சிரேஸ்ட் பொலிஸ் கண்காணிப்பாளர் கே.பீ. கீர்த்திரத்னவை, நேற்முன்தினம் (28) கைது செய்தனர். ரம்புக்கனையில் ஏப்ரல் 20ஆம் திகதியன்று நடத்தப்பட்ட போராட்டத்தின் போது, மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் கொல்லப்பட்டார் 24 பேர் படுகாயமடைந்தனர்.

**❝ துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்ட பொலிஸாரை உள்ளிட்டவர்களை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு, குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு கேகாலை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது**

அவ்விடத்தில் வழிமறிக்கப்பட்ட எரிபொருள் பவுசருக்கு தீ மூட்டுவதற்கு முயற்சித்த போதே, ஆர்ப்பாட்டக்கார்களை களைப்பதற்காக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் தரப்பு தெரிவித்திருந்தது.

இந்நிலையில், கேகாலை நீதவான் மருத்துவ அதிகாரி, துப்பாக்கிப் பிரயோகத்தினால் மரணம் சம்பவித்துள்ளது என அறிக்கையிட்டுள்ளார். அதனையடுத்தே, துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொள்வதற்கு உத்தரவிட்ட அதிகாரிகள் மற்றும் துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்ட பொலிஸாரை உள்ளிட்டவர்களை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு, குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு கேகாலை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

## ஸ்டாலினின் தீர்மானம் ஏகமனதாக...

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமையில் இந்தியாவின் நிதி மற்றும் பொருட்கள் உதவி கிடைக்கப்பெற்று வருகின்ற நிலையில் நேற்று (29) கூடிய தமிழக சட்டசபையின் போது இலங்கைக்கு தமிழக அரசின் நேரடி உதவிகளை பெற்றுக்கொடுக்க இந்திய மத்திய அரசாங்கம் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என்ற தீர்மானம் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களினால் கொண்டுவரப்பட்டது.

கடும் இன்னலுக்கு முகங்கொடுத்துள்ள இலங்கை மக்களுக்கு உதவி செய்யும் நோக்கில் தமிழக அரசாங்கம் அறிவித்துள்ள உணவு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் மற்றும் மருந்துகள் முதற் கட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை மக்களுக்கு மேலும் உதவிகள் தேவைப்படும் என்றால் அடுத்த கட்டமாக உதவிகளை செய்ய தமிழக அரசாங்கம் எப்போதும் தயாராக உள்ளது என்பதையும் முதல்வர் சட்டமன்ற சபையில் சுட்டிக்காட்டியிருந்தார்.

தமிழ் நாட்டு மக்கள், அரசியல் கட்சிகள், தொண்டு நிறுவனங்கள், வர்த்தகத்துறையினர் உள்ளிட்டோர் இலங்கைக்கு உதவிசெய்ய முன்வந்தால் அவர்களையும் ஒன்றிணைத்து உதவி செய்ய தமிழக அரசாங்கம் தயாராக உள்ளது எனவும் கூறினார். இலங்கை பொருளாதார நெருக்கடியை அண்டை நாட்டு பிரச்சினையாக பார்க்க முடியாது. இலங்கை தமிழர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவ வேண்டும் என்பதே அரசாங்கம் நிலைப்பாடு என்பதையும் அவர் சபையில் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அரசாங்கத்துக்குள் மூன்று அணிகள்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று (29)ஆம் திகதி காலையில் இடம்பெற்ற கலந்துரையாடல் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார். இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அமைச்சரவை முழுமையாக பதவிவிலக வேண்டும், சகல கட்சிகளையும் ஒன்றிணைத்த இடைக்கால அரசாங்கம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் . ஒரு வருடகாலத்திற்கு இவ்வாறு இடைக்கால அரசாங்கமொன்றை கொண்டு சென்று நாட்டின் நெருக்கடிகளுக்கு தீர்வு காண வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும். ஆனால் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவோ அல்லது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவோ எமது கருத்துக்களை முழுமையாக கேட்பதாக தெரியவில்லை.

உண்மையை கூறுவதென்றால், நாம் சுயாதீன குழுவாக ஒரு நிலைப்பாட்டில் இருக்கின்றோம், ஆனால் ஜனாதிபதியுடன் ஒரு அணியும், பிரதமருடன் வேறொரு அணியும் இயங்கிக்கொண்டுள்ளனர். அரசாங்கத்திற்குள் இப்போது மூன்று அணிகளாக உள்ளோம். இந்த மூன்று அணிகளுமே ஒரு பொதுவான நிலைப்பாட்டை எட்டுவதாக தெரியவில்லை என்றார்.

# மருந்துப் பொருட்களுடன் ‘INS Gharial’ கப்பல் வந்தது



இந்திய கடற்படைக்குச் சொந்தமான Landing Ship Tank வகையைச் சேர்ந்த ‘INS Gharial’ கொழும்பு துறைமுகத்தை நேற்று (29) வந்தடைந்தது. அதனை, இலங்கை கடற்படையினர் சம்பிரதாயபூர்வமாக வரவேற்றனர்.

128.8 மீற்றர் நீளம் கொண்ட அந்தக் கப்பலில் எடுத்துவரப்பட்ட அத்தியாவசிய மருந்துப் பொருட்கள், வைத்தியப் பொருட்கள் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன. ‘INS Gharial’ கப்பல் நாட்டில் நங்கூரமிட்டிருக்கும் காலத்தில், இந்திய கடற்படை பணியாட்தொகுதியினர், இலங்கை கடற்படையினருடன் இணைந்த இருதரப்பு நல்லுறவை மேம்படுத்திக்கொள்வதற்கான செயற்றிட்டங்களை முன்னெடுப்பர். ‘INS Gharial’ கப்பல், மே முதலாம் திகதி புறப்பட்டுச் செல்லும் என இலங்கை கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

இந்த மருத்துப்பொருட்கள், இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லேயால், சுகாதாரத்துறை அமைச்சர் சன்ன ஜயசுமனவிடம், உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன.









# மாமனிதர் சிவராமின் (தராகி) 17ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு

மாமனிதர் சிவராமின் (தராகி) 17ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு வடக்கு, கிழக்கில் நேற்று (29) அனுஷ்டிக்கப்பட்டது.

முல்லைத்தீவு ஊடக அமையத்தின் தலைவர் சண்முகம் தவசீலன் தலைமையில் முல்லைத்தீவிலும், வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தால் வவுனியாவிலும், யாழ். ஊடக அமையத்திலும், மட்டு.ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் வா.கிருஸ்ணகுமார் தலைமையிலும் நடைபெற்றன.

2005 ஏப்ரல் 28 ஆம் திகதியன்று கடத்தப்பட்ட, மாமனிதர் சிவராம் (தராகி) மறுநாள் 29 ஆம் திகதியன்று பாராளுமன்றத்துக்கு அருகில் கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

யாழ். ஊடக அமையத்தில், மாமனிதர் சிவராம் உருவப்படத்துக்கு மட்டுமன்றி, படுகொலை செய்யப்பட்ட செல்வராஜா ரஜிவர்மனின் உருவப்படத்துக்கும், மலர் மாலை அணிவித்து, மலர் தூவி, சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.


இளம் ஊடகவியலாளரான செல்வராஜா ரஜீவர்மன், உதயன் பத்திரிகையின் அலுவலக செய்தியாளராக கடமையாற்றி வந்த வேளை 2007ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி, ஸ்ரான்லி வீதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாத நபர்களால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார்.


(படங்கள்: தமிழ்மிரர் நிருபர்கள்)


























### மட்டக்களப்பு ஊடகவியலாளர்களையும்

# கொலை செய்யவா முயல்கின்றீர்கள்?

## பொலிஸாரிடம் காட்டமாக வினவினார் சாணக்கியன்

**வ.சக்தி**

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் டி.சிவராமின் 17 ஆவது நினைவு தினம் நேற்றாகும். அதனையொட்டி வடக்கு, கிழக்கில் பல்வேறு நிகழ்வுகள் நேற்று (29) முன்னெடுக்கப்பட்டன. சில இடங்களில் ஊடகவியலாளர்கள் படுகொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பில் நினைவேந்தல் நிகழ்வும் கவனயீர்ப்பு போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.




மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு.ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.

இதன்போது, ஊடகவியலாளர்கள் அல்லாத, சிவில் உடையில் இருந்த சிலர், ஊடகவியலாளர்களைப் புகைப்படம் எடுத்து, காணொளியையும் எடுத்தனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர்களை காணொளி எடுப்பவர்கள், ஊடகவியலாளர்கள் இல்லை என்பதை கண்டுகொண்ட சாணக்கியன் எம்.பி, மட்டக்களப்பிலுள்ள ஊடகவியலாளர்களையும் கொலை செய்யவா முயல்கின்றீர்கள் என சிவில் உடையில் ஊடகவியலாளர்களை காணொளி எடுத்த பொலிஸாரிடம் காட்டசாட்டமாக வினவினார்.

கொழும்பில் முன்னெடுக்கப்படும் போராட்டங்களின் போது இவ்வாறு செய்வீர்களா? வெட்கமாக இல்லையா? சீருடையில் வந்து ஏன்? புகைப்படம் எடுப்பதில்லை என்றெல்லாம் காரசாரமாக கேள்விகளை கேட்டார். ஊடகவியலாளர்களை புகைப்படம் எடுத்தவர்களையும் காணொளி எடுத்தவர்களையும், தனித்தனியாக, நீங்கள் எந்த ஊடகம், எந்தஊடகம் என சாணக்கியன் எம். பி கேட்டு, அவர்களின் போலி முகங்களை அம்பலப்படுத்தினார்.

எனினும், சிவில் உடையில் காணொளி, புகைப்படம் எடுத்தவர்கள், தாங்கள் பொலிஸ் ஊடகம் என பதிலளித்துவிட்டு நகர்ந்தனர்.

# எரிவாயு தட்டுப்பாட்டை நிவர்த்திக்க முடியும்

எரிவாயு தட்டுப்பாட்டை மே மாத ஆரம்பத்தில் முழுமையாக நிவர்த்திக்க முடியும் என வர்த்தக அமைச்சு அறிவித்துள்ளது.

இந்திய கடன் வசதியின் கீழ் லிட்ரோ மற்றும் லாஃப் நிறுவனங்களுக்குத் தேவையான நிதியை பெற்றுக்கொடுக்கவுள்ளதாக வர்த்தக அமைச்சர் ஷெஹான் சேமசிங்க குறிப்பிட்டார்.

இந்திய அரசாங்கத்தின் தலையீட்டுடன் மேலும் சில விநியோகஸ்தர்களை தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுவதாக அவர் கூறினார். இதனிடையே, எரிவாயு கொள்வனவுக்காக







உலக வங்கியிடமிருந்து 90 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை பெற்றுக்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நிதியை லிட்ரோ மற்றும் லாஃப் நிறுவனங்களின் சந்தை கேள்விக்கு அமைய பகிர்ந்தளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் கூறியுள்ளார்.

இதேவேளை, நகரங்களில் வாழும் மக்களுக்கு முன்னுரிமை வழங்கி, எரிவாயு சிலிண்டர்களை பகிர்ந்தளிக்கவுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதனை தவிர தற்போது நாளாந்தம் 60,000 சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகிக்கப்படுகின்ற போதிலும், எதிர்வரும் நாள்களில் அதனை 30,000 வரை குறைக்கவுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, 3,900 மெட்ரிக் தொன் எரிவாயுவை ஏற்றிக்கொண்டு நேற்று முன்தினம் (28) நாட்டை வந்தடைந்த கப்பலிலிருந்து எரிவாயுவை இறக்கும் பணிகள் நேற்று (29) ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# யாழ். இளைஞர்கள் இருவர் தமிழகத்தில் தஞ்சம்

**எஸ் தில்லைநாதன்**

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர்கள் இருவர், சட்டவிரோதமான முறையில் கடல் வழியாக தமிழகம் சென்று தஞ்சமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணம், குருநகர் பகுதியைச் சேர்ந்த இருவரே, புதன்கிழமை (27) படகொன்றின் ஊடாக, தனுஷ்கோடிக்குச் சென்றுள்ளனர். அங்கு தமிழக கடலோர பாதுகாப்புப் பொலிஸார், அவ்விருவரையும் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் காரணமாக யாழ்ப்பாணம், மன்னார் கடற்பரப்புகள் ஊடாக தமிழகம் சென்று தஞ்சமடைவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மார்ச் 22 ஆம் திகதியில் இருந்து இதுவரையிலும் இலங்கையைச் சேர்ந்த 77 பேர் அகதிகளாக தமிழகத்துக்குச் சென்றுள்ளனர்.

# யாழில் நூதனமாக வழிப்பறியில் ஈடுபட்ட இளைஞர்கள் கைது

**எம்.றொசாந்த்**

யாழ். மாநகரில் வெவ்வேறு பகுதிகளில் இடம்பெற்ற நான்கு சம்பவங்களில் இளைஞர்களை அச்சுறுத்தி பணம் மற்றும் அலைபேசிகளை அபகரித்த கும்பலைச் சேர்ந்த இருவர் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் - புறநகர் பகுதியில் இளைஞரிடம் ரூ. 6 ஆயிரம் பணமும் அலைபேசியும் நேற்று (29) அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது. இது தொடர்பில், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வழங்கப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம், இருவர் கைது செய்யப்பட்டனர்.

அதேவேளை, யாழ்ப்பாணம் மாநகரில் கடந்த ஒரு வாரத்துக்குள் 3 வெவ்வேறு சம்பவங்களில் இளைஞர்களை அச்சுறுத்தி பணம் மற்றும் அலைபேசிகள் அபகரிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

> **“இளைஞர்களை வழிமறிக்கும் கும்பல், தமது சகோதரியுடன் கதைப்பதாகவும் சகோதரியின் படத்தை பணப்பையில் வைத்திருப்பதாகவும் அச்சுறுத்துவர்**

இளைஞர்களை வழிமறிக்கும் கும்பல், தமது சகோதரியுடன் கதைப்பதாகவும் சகோதரியின் படத்தை பணப்பையில் வைத்திருப்பதாகவும் அச்சுறுத்துவர். அவ்வாறு இல்லையென பணப்பையை எடுத்து காட்டியவுடன், அலைபேசியையும் சோதிப்பதாக தெரிவித்து, இரண்டையும் அபகரித்துக்கொண்டு தப்பித்துச் சென்றுவிடுகின்றனர்.



# இழப்பீடு கோரி மனுத்தாக்கல்

இரசாயன உரத்தை தடை செய்ததன் மூலம் விவசாயத்துறைக்கு ஏற்பட்டுள்ள சேதங்களுக்கு இழப்பீடு கோரியும், விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கக் கோரியும் உயர்நீதிமன்றத்தில், நேற்று (29) மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

சட்டத்தரணிகள் தாரக நாணயக்கார, எரந்த வெலியங்கே, கோதாகொட, விவசாயிகள் அமைப்பின் செயலாளர் திலகவன்ஷ அமரதிவாகர ஆகியோர் இணைந்தே மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

இரசாயன உரம் பயன்படுத்துவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடை, விவசாயிகளின் அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும் என மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.


ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, சட்டமா அதிபர், முன்னாள் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே உள்ளிட்ட பல அதிகாரிகள் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அத்துடன், அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் டொக்டர் அநுருத பாதெனிய, பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் ஆகியோரும் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

# சுயாதீன எம்.பிக்கள் குழு பாக்லேயை சந்தித்துப் பேச்சு

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்திலிருந்து விலகி சுயாதீனமாக செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு, இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயை சந்தித்து கலந்துரையாடியுள்ளது.

இதன்போது, நாட்டின் தற்போதைய



பொருளாதார, அரசியல் நிலை தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

“இலங்கைக்குத் தேவையான ஒத்துழைப்புகளை இந்தியா தொடர்ச்சியாக வழங்கும்” என உயர்ஸ்தானிகர் இதன்போது கூறியதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

நெருக்கடியான நிலையில் இலங்கையுடன் தொடர்ச்சியாக கைகோர்த்துள்ளமை குறித்து பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்திய மக்களுக்கு இதன்போது நன்றி தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சுயாதீன குழு உறுப்பினர்கள் சிலரும், முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில, டிரான் அலஸ் எம்.பி ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.



# மனித வர்க்கத்துக்கு சவாலாகும் நீர்



பைஷல் இஸ்மாயில்

**உலகிலுள்ள எல்லா உயிரினங்களும் நீரின் தேவையை ஏதோ ஒரு வகையில் பெற்றுக்கொண்டிருக்கின்றன. சாதாரணமாக ஒரு மனிதன் நீரின்றி 3 – 5 நாள்களுக்கு மேல் உயிர்வாழ முடியாது. சுத்தமான நீரின்றி உலகை நினைத்துக்கூட பார்க்கவும் முடியாது.**

இலங்கையின் நீர் வளமானது பல்வேறுபட்ட சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றது. குறிப்பாக, எமது நாட்டில் 100 ற்கு மேற்பட்ட ஆறுகள் மற்றும் வாவிகளுடன் நேரடியாக நீர்க் கழிவுப் பொருட்கள், சாக்கடைக்கழிவு நீர், எண்ணெய் போன்ற பல கழிவுகள் சேர்வதால் அனைத்து ஆறுகளும், வாவிகளும் மாசடைந்து வருவதாகவும், இலங்கையில் அதிகளவில் மாசடைந்த நதியாக களனி கங்கை காணப்படுன்றதென இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக புவியியல் துறை தெரிவித்துள்ளது.

இன்றைய நிலைமையில், உலகின் 80 நாடுகளில் வாழும் 100 கோடிக்கு மேற்பட்ட மக்களில் 40 சதவீதமானவர்கள் நீர் பற்றாக்குறைக்கு முகங்கொடுத்துள்ளனர் எனவும் எதிர்காலத்தில் நீர் ஓர் சவாலாக அமையலாம் என இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக புவியியல் துறை பேராசிரியர் எம்.ஐ.எம்.கலீல் தெரிவித்துள்ளார்.

நீருக்கு இணை, நீர் மட்டுமேயாகும். நீருக்கு எந்தவிதமான பதிலீடோ அல்லது பிரதியீடோ இல்லை. பூமியின் மொத்தப்பரப்பில் 71 சதவீதம் நீர்ப்பரப்பாகக் காணப்பட்டாலும் இந்நீர்ப்பரப்பில் பெரும்பகுதி சமுத்திரங்கள் மற்றும் ஏனைய பரந்த நீர் நிலைகளாக இருக்கின்றன. இதில் 1.6 சதவீதம் நிலக்கீழ் நீரும், 0.001 சதவீத நீர் வளிமண்டலத்தில் வாயு வடிவில் காற்றில் மிதக்கக் கூடியதாகவும் இருக்கின்றது.

பாதுகாப்பான குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியாமல் 2.2 பில்லியன் மக்கள் உலகில் வாழ்வதாகவும், உலக சனத்தொகையில் மூவரில் ஒருவருக்கு பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதில்லையெனவும், மூன்றாம் உலகப் போர் நடைபெறுமாக இருந்தால் அது நீருக்காக மாத்திரமே இடம்பெறுமென உலக ஆய்வறிக்கைகள் சுட்டிகாட்டுகின்றன.

இந்து சமுத்திரத்தின் மத்தியில் இலங்கை அமைந்துள்ளதால் எமது நாடு நீர் வளம் நிறைந்ததொரு நாடாகக் காணப்படுகின்றது. அதனால் எமது நாட்டில் பருவக் காற்றுகள், மேற்காவுகை மழைவீழ்ச்சி, சூறாவளி போன்ற காரணிகளால் மழைவீழ்ச்சி கிடைக்கின்றது. அதுமாத்திரமின்றி இலங்கையின் அமைவிடம் அயன மண்டலப் பிரதேசத்தில் அமைந்திருப்பதால் அதிக வெப்பநிலையைப் பெறுவதோடு வடகீழ், தென்மேல் பருவக்காற்று மூலம் வருடந்தோறும் அதிக மழையைப் பெறுகின்ற நாடாகவும் காணப்படுகின்றது.

இலங்கையின் மொத்த உள்நாட்டு நீர்ப்பரப்பு 2,905 சதுர கிலோ மீற்றராக காணப்படுகின்றது. மத்திய மலை நாட்டிலிருந்து 103 ஆறுகள் உற்பத்தியாகி ஓடுகின்றன. மத்திய மலைநாடு இலங்கையின் மத்தியில் அமைந்துள்ளதால் பருவக்காற்றுக்களின் தாக்கம் அதிகளவு காணப்படுவதோடு அதனால் கிடைக்கின்ற மழைவீழ்ச்சியில் 64 சதவீதம் ஆறுகளாக ஓடி கடலைச் சென்றடைகின்றது.

பல தசாப்தங்களுக்கு முன்னர் இலங்கையின் நீர்வளம் கட்டுப்பாடின்றி அதிகளவு பயன்படுத்தக்கூடிய நிலையில் காணப்பட்டமையால் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினை எதுவும் எழவில்லை. எனினும் தற்காலத்தில் பல்வேறு மானிட நடவடிக்கைகள் காரணமாக தரைமேற்பரப்பு நீர், தரைக்கீழ் நீர் என்பவற்றுடன் பல்வேறு கழிவுப்பொருட்கள் சேர்வதால் நீரின் இயல்பு மாற்றமடைந்து அது மாசடைந்த நீராக மாறுகின்றது.

எமது நாட்டின் மேற்பரப்பு மற்றும் தரைக்கீழ் நீர் மாசடைவினால் நீர் வளம் மாற்றமடைந்து வருவது கவலைக்குரிய விடயமாகும். குறிப்பாக இலங்கையின் வட மத்திய மாகாணத்திலேயே நீர்ப்பரப்புக்கள் அதிகமாகக் காணப்படுகின்றது. அங்குள்ள தரைக்கீழ் நீரில் கட்மியம் எனும் நச்சுப் பதார்த்தம் கலந்துள்ளதால், நீர் பாதிக்கப்பட்டுள்ளதென ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

நீர் வளங்களில் அளவுக்கதிகமான சுரண்டல் நீர்ப்பற்றாக் குறைவுக்கும், வரட்சிக்கும் காரணமாவதால் பயிர் விளைவு குறைவடைந்து பசி, பட்டினி, மந்தபோசணை, நோய்கள் என பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க நேரிடுகின்றனர். மேலும், நகர் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் நில மூடுகை (கொங்கிறீட் மூடுகை) காரணமாக மழைநீர் தரையால் உறுஞ்சப்படாமை மற்றும் கழிவுப்பொருட்கள் அதிகரிப்பு என்பன நிலக்கீழ் நீர் மட்டத்தில் ஏற்படும் விளைவுகளில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

நீர்ப்பாதுகாப்பு, சுத்தமான நீர் வழங்கல், நீர் மூலமான நோய்த்தடுப்பு, நீரை சிக்கனமாக பயன்படுத்தல், நீரைச் சேமித்தல், நீர் மாசடைவதை தவிர்த்தல், நீர் வளப்பாதுகாப்பு தொடர்பான அறிவூட்டலை வழங்கல், நீர்வளத்தை பாதுகாக்கும் செயற்றிட்டங்கள் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான பல செயன்முறைத்திட்டங்கள் ஊடாக நீர்ப்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

நீர்த் தேவையை பூர்த்தி செய்து விவசாயத்துறையை மேம்படுத்துவதற்கென நீர்ப்பாசன திணைக்களத்தால் அணைக்கட்டுகள் நிர்மாணிக்கப்படுவதுடன் நாடளாவிய ரீதியிலுள்ள குளங்களை புனரமைக்கும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல், ஆறுகளுக்கான நீர் வழங்கல் பிரதேசங்களை பாதுகாத்தல், கழிவு நீரை கடலுடன் கலக்க விடாமல் குளங்கள் மற்றும் நீர்நிலைகளில் தேக்கி வைத்தல் போன்ற செயற்பாடுகளின் மூலம் குடிநீர் வளத்தை பாதுகாக்க முடியும்.

மலையகத்தில் காடுகள் அழிக்கப்பட்டு வருவதால் எதிர்காலத்தில் நீருற்றுகள் குறைவடைந்து நீர் வீழ்ச்சிகள் மற்றும் நதிகள் என்பன வற்றிவிடக்கூடிய அபாய நிலைமை ஏற்படலாம். எனவே இவ்வாறான நீர் வள அழிவை தடுப்பதற்கு காட்டு வளப்பாதுகாப்பு மற்றும் அதிகமான மரங்களை நடுதல் போன்ற செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல் அவசியமாகும்.

மேலும் நீரேந்து பிரதேசங்களை பாதுகாத்தல், நீரைச் சுத்தம் செய்தல், நீரில் இரசாயன பொருட்கள் கலப்பதை தடை செய்தல், மீள் சுத்திகரிப்புகளை குறிப்பிட்ட கால இடைவெளியில் மேற்கொள்ளல், நீர் வீண் விரயத்தை முற்றாக நிறுத்தும் வழி முறைகளை தேசிய மற்றும் உள்ளூர் மட்டங்களிலும், பிரதேசங்களின் கால வேறுபாடுகளுக்கேற்ப ஏற்பாடு செய்து நடைமுறைப்படுத்தல், நீர் நிலைகளில் வண்டல் படிவுகளை அகற்றி வண்டல் படியா வண்ணம் பாதுகாத்தல், தரைக்கீழ் நீர் வளத்தை குறையாது பயன்படுத்துவதுடன் சிறந்த முறையில் முகாமை செய்தல் போன்ற விடயங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நீரை பாதுகாக்க முடியும்.

எனவே, சுத்தமான நீரின்றி உலகை நினைத்துக்கூட பார்க்கவே முடியாது. நீர் மாசடைவதை கட்டுப்படுத்துவதன் மூலம் நீரை பாதுகாக்க முடியும். அவ்வாறில்லாமல், நாம் அசமந்தப்போக்கில் செயற்படுவோமாக இருந்தால் அதிகரித்து வரும் மனித வர்க்கத்துக்கு எதிர்காலத்தில் நீர் சவாலாக அமையலாம்.





சமூகப்பணி என்பது எந்த வரையறைகளும் அற்றது:

# உதவுவதற்கு மனம் போதும்



அ. அச்சுதன்















வடக்கு, கிழக்கு ஒப்பனையாளர் உதவும் கரங்கள் அமைப்பு தேசியரீதியில் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்று இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் தனது சேவையைப் புரிந்து வருகின்றது. உதவி கேட்போருக்கு இல்லை என்று சொல்லாமல் உதவிகளை வழங்கி வருகின்றது.

வடக்கு, கிழக்கு ஒப்பனையாளர் உதவும் கரங்கள் அமைப்பின் செயலாளர் இமானுவேல் றொசான் கருத்து தெரிவிக்கையில், இற்றைக்கு 3 வருடங்களுக்கு முன்னதாக இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது என்றார்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல ஒப்பனையாளர் சங்கப் பிரதிநிதிகளும் வடக்கில் உள்ள ஒப்பனையாளர் சங்கப்பிரதிநிதிகளும் 12.07.2020 அன்று ஒன்று கூடி, மன்னாரில் மகாநாட்டினை நடத்தி இருந்தோம். அதன் பலனாக எமது அமைப்பு தேசிய ரீதியில் புதிய வடிவம் எடுத்தது என்றார் சங்கத்தின் செயலாளர் றொசான்.

ஒப்பனையாளர் உதவும் கரங்கள் அமைப்பு மகாநாட்டின் பின்னர், அங்கத்தவர்களின் செயற்பாடு, தொழில் நிலைய செயற்பாடுகள், கல்வி, கலாசாரம் உட்பட பல விடயங்களில் திட்டங்கள் வகுக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த அமைப்பு வடக்கு, கிழக்கு சொந்தங்களின் உறவுப்பாலமாக காணப்படுகின்றது. பயனாளிகளை தெரிவு செய்வதில் பாராபட்சம் இன்றி, சகல இனமக்களுக்கும் உதவும் கரங்களாக காணப்படுகின்றது. உள்நாட்டு, வெளிநாட்டு தனவந்தர்களின் மூலம் வாழ்வாதார உதவிகளை பெற்று, வறுமையில் வாடும் மக்களுக்கும் உதவிக்கரம் நீட்டி வருகின்றது. குறிப்பாக தாய், தந்தை இல்லாத பாடசாலை மாணவர்களுக்கு கல்வி நடவடிக்கைகளுக்கான செயற்பாடுகளை முன் எடுத்து வருகின்றது.

ஒப்பனையாளர் உதவும் கரங்கள் அமைப்பின் தலைமைக்காரியாலயம் மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடியில் அமையப்பெற்றுள்ளது. திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், அம்பாறை, கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய எட்டு மாவட்டங்களில் கிளைக் காரியாலயங்கள் இயங்கி வருகின்றன.

எட்டு மாவட்டங்களையும் சேர்ந்த 13 நிர்வாகிகள் இவ் அமைப்பின் முக்கியஸ்தர்களாக காணப்படுகின்றனர். இந்த 13 நபர்களின் தொழில் நிலையங்களில் உழைப்பில் இருந்து கிடைக்கும் வருமானத்தின் ஒரு பகுதியை தங்களது தொழில் நிலையங்களில் சிறு உண்டியல் மூலம் சேமிப்பு செய்து, அதில் வரும் பணத்தினை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துகின்றனர்.

சமூகப் பணி என்பது எந்த வரையறைகளும் அற்றது; பணம் படைத்தவர்கள் மாத்திரம் செய்யக் கூடிய பணியல்ல; குணம், அன்பு படைத்தவர்களும் செய்யக் கூடிய பணிகளும் சமூகப்பணிகளே. அந்த வகையில், இவ் அமைப்பில் சிறந்த நல்ல பணிகள் முன்னேடுக்கப்படுகின்றன.

இவ் அமைப்பில் கல்விப்பிரிவு, சுகாதாரப்பிரிவு, கலை கலாசாரப்பிரிவு, தொடர்பாடல் பிரிவு, ஊடகப்பிரிவு, நலன்புரி பிரிவு, ஆலோசனைப் பிரிவு, விளையாட்டுப் பிரிவு என பல பிரிவுகள் அமையப்பெற்று சிறப்பாக இயங்கி வருகின்றது. அண்மையில், அம்பாறை, காரைதீவைச் சேர்ந்த காரையன் கதன் என்ற இளம் எழுத்தாளரின் நூலை வெளியீடு செய்து, அவருடைய இலக்கிய செயற்பாட்டை ஊக்கப்படுத்தியுள்ளனர்.

ஒப்பனையாளர் உதவும் கரங்கள் எனும் அமைப்பினூடாக, சிறிய வருமானங்களை தொழில்கள் ஊடாக பெற்றுக் கொள்கின்ற போதிலும் சமூக நலப்பணிகளில் மிகவும் ஆர்வத்துடன் ஈடுபடுவதனை காண்கின்ற போது இவ்வாறான செயற்பாடுகளை பொது வெளிக்கு கொணர்ந்து ஊக்கப்படுத்துதல் மிக அவசியமென்பது தெரிகின்றது.

அண்மையில் சுய தொழில் முயற்சியாளர்களுக்கு கோழி வளர்ப்பிற்கான ஆரம்ப ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது விசேட அம்சமாகும். அண்மையில், வடக்கு கிழக்கு ஒப்பனையாளர் உதவும் கரங்கள் அமைப்பினர், அக்கரைப்பற்று முற்போக்கு அபிவிருத்திச் சங்கத்துடன் இணைந்து தங்களுக்கே உரித்தான தொழில் முயற்சிகளின் ஊடாக, சமூக நலனோம்புகை செயற்றிட்டத்தில் களம் கண்டனர். ஆலையடிவேம்பு விபுலானந்த சிறுவர் இல்லத்தின் பொறுப்பாளர் கைலாசபதியின் வேண்டுகோளுக்கு இணங்க, சிறுவர் இல்ல மாணவர்களுக்கு இலவசமாக முடி திருத்தி அதனூடாக தங்களது ஆத்ம திருப்தியை பெற்றுக்கொண்டனர்.

இந்தக் குறித்த நிகழ்வை வடக்கு கிழக்கு ஒப்பனையாளர் உதவும் கரங்கள் அமைப்பின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் செல்வம் உதயகுமார் நெறிப்படுத்தியிருந்தமை சிறப்பு நிகழ்வாகும். சமூக நலன் சார்ந்த செயற்பாடுகளை மேற்கொள்ள கோடீஸ்வரர்களாக இருக்க வேண்டும் என்பதற்கான எந்த வரையறைகளும் இல்லை என்பதற்கு வடக்கு கிழக்கு ஒப்பனையாளர் உதவும் கரங்கள் அமைப்பு நல்ல ஓர் உதாரணமாகும்.

அடிப்படை வசதிகள் இல்லாததால்

# சடலங்களுடன் அவதி



சுப்பிரமணியம் பாஸ்கரன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் சாதாரணமாக ஒரு சேவையை பெற்றுக் கொள்ளவோ அல்லது ஒரு தேவையை நிறைவு செய்யவோ நாள்கணக்கில் அலைகின்ற அவல நிலை தொடர்ந்து நிலவுகின்றது.

இலங்கையில் வறுமை நிலையில், முதலிடத்தில் உள்ள மாவட்டமாகவும் இதுவரை அடிப்படைத் தேவைகள் கூட நிறைவு செய்யப்படாத ஒரு மாவட்டமாகவும் காணப்படுகின்ற முல்லைத்தீவு மாவட்டத்தில், மக்கள் சாதாரணமாக ஒரு சேவையை பெற்றுக் கொள்ளவோ அல்லது ஒரு தேவையை நிறைவு செய்யவோ முடியாமல் அலைந்து கொண்டிருக்கின்றார்கள்.

வடக்கு மாகாணத்தின் வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலை ஆகிய மாவட்டங்களை எல்லைப் பிரதேசங்களாக கொண்டு, 1978 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டமானது, வடக்கு மாகாணத்தில் அதிகூடிய நிலப்பரப்பு கொண்ட பிரதேசமாகவும் காணப்படுகின்றது.

குறிப்பாக, 2,415 km2 (932 sq mi) நிலப்பரப்பைக் கொண்ட இப்பிரதேசத்தின் பெரும்பாலான பகுதி வன்னி இராட்சியமாகும்

ஏ-09 வீதியின் கிழக்கு, மேற்குப் பகுதிகளாக அமைந்துள்ள இந்த மாவட்டத்தில், மேற்கு புறத்தில் அமைந்துள்ள மிகவும் பின்தங்கிய அடிப்படை வசதிகளே இல்லாத 35க்கும் மேற்பட்ட கிராமங்களை உள்ளடக்கிய வகையில் 20 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 12,465 இற்கும் மேற்பட்ட மக்களும் அதேபோல மிகவும் பின்தங்கிய போக்குவரத்து வசதிகள் இல்லாத 68 க்கும் மேற்பட்ட கிராமங்களை உள்ளடக்கிய 15 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் 9,641 க்கும் மேற்பட்ட மக்களுமாக சுமார் 22,000 மேற்பட்ட மக்கள் வாழுகின்ற இந்தப் பிரதேசங்கள், அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்படாத நிலையிலும் ஒரு சாதாரணமாக போக்குவரத்துகளை மேற்கொள்ள முடியாத நிலையிலும் காணப்படுகின்றன.

இந்த மக்களுக்கு சேவைகளை வழங்க கூடிய வகையில் அமைந்துள்ள மாங்குளம் ஆதார வைத்தியசாலை, மல்லாவி ஆதார வைத்தியசாலை என்பன இன்றுவரை அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்படாத வைத்தியசாலைகளாகவே காணப்படுகின்றன.

சாதாரணமாக ஒரு பிரதேச வைத்தியசாலை கொண்டிருக்க வேண்டிய ஓர் அடிப்படை வசதிகள் கூட இல்லாத நிலை இங்கு காணப்படுகின்றது. வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதியர்கள், ஏனைய உத்தியோகத்தர்களுக்கான பற்றாக்குறை என ஆளணிவளங்களுடன், வாகன வசதிகள் என தேவைப்பாடுகளின் பட்டியல் நீண்டு செல்கின்றது.












இவ்வாறான நிலையில், இந்தப் பிரதேசத்தில் வாழும் மக்கள், தமது தேவைகளை நிறைவு செய்வதற்கு பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இறந்தவர்களின் உடலங்களை, உறவினர்களிடம் கையளிக்க குறித்த பிரதேச வைத்தியசாலைகளில் சட்ட வைத்திய அதிகாரிகளின் இன்மை, குறித்த பிரதேசங்களில் திடீர் மரண விசாரணை அதிகாரிகள் இன்மை என்பன மிகப் பெரும் சிரமங்களை ஏற்படுத்துகின்றன.

அதாவது, இந்தப் பிரதேசத்தில் விபத்து அல்லது சந்தேகத்திற்கிடமமாக உயிரிழந்த ஒருவரின் சடலத்தை, பிரேத பரிசோதனைக்காக 78 முதல் 97 கிலோ மீற்றர் தூத்திலுள்ள முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு சென்று, உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளளும் நிலை காணப்படுகின்றது.

அதன் பின்னர் உறவினர்கள் சடலத்தைப் பெற்று, இறுதிக் கிரியை செய்யும் வரை பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு, மலர்ச்சாலைக்கு எடுத்துச் செல்ல வேண்டிய நிலையில் அதனை சரியான முறையில் செய்யக்கூடிய மலர்ச்சாலை வசதிகளில்லை; அதற்காக வைத்தியசாலையில் இருந்து பொறுப்பேற்ற சடலத்தை, சுமார் 110 கிலோ மீற்றர் துரத்திற்கு அப்பாலுள்ள கிளிநொச்சி அல்லது வவுனியாவுக்குக் கொண்டு செல்ல வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

இதனால் உயிரிழந்தவரின் உறவினர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாவதுடன் பெருந்தொகைப் பணத்தையும் செலவு செய்ய வேண்டிய ஒரு நிலை காணப்படுகின்றது. செலவு செய்யப்பட்டாலும், அதை உரிய காலத்துக்குள் பெற்றுக் கொள்வது என்பது, மிகப் பெரும் சவாலாகவே இருக்கின்றது

நட்டாங்கண்டல் பகுதியில் உயிரிழந்த ஒருவரின் சடலத்தை, மல்லாவி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்று, அங்கிருந்து நீதிமன்றக் கட்டளைக்கு அமைவாக உடற்கூற்றுப் பரிசோதனைக்காக, முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, அதன் பின்னர் சடலத்தை உறவினர்கள் பெற்று, அதனை தூய்மைப்படுத்தி, பாதுகாத்து கிரிகைகளுக்காக எடுத்துச் செல்லக்கூடிய வகையில், மலர் சாலைகள் இல்லாத நிலையில், மீண்டும் சடலத்தை கிளிநொச்சிக்கு எடுத்து சென்று, அங்கு அதனை சீர்செய்து, வீட்டுக்கு கொண்டு செல்ல வேண்டிய நிலைமை காணப்பட்டது.

இவ்வாறு, இத்தனை கிலோ மீற்றர்கள் தூரம் அலைந்து இவற்றைச் செய்ய வேண்டிய நிலை காணப்படுகின்றது. குறிப்பாக குறித்த பிரதேசத்தில் உயிரிழந்தவரின் இறுதிக் கிரியைகளை கூட, சரியாகச் செய்ய முடியாத ஓர் அவல நிலை காணப்படுகின்றது

அதாவது, மாங்குளம் ஆதார வைத்தியசாலை, மல்லாவி ஆதார வைத்தியசாலை ஆகியவற்றுக்கான சட்ட வைத்திய அதிகாரிகளை நியமிப்பதற்கு, இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. அதேபோல மரணவிசாரணை அதிகாரிகளும் இல்லாத நிலை காணப்படுகின்றது.

இந்தப் பிரதேச மக்களுடைய, இது போன்ற தேவைகளை நிறைவு செய்யக்கூடிய வகையில், சட்ட வைத்திய அதிகாரிகளையும் திடீர் மரண விசாரணை அதிகாரிகளையும் நியமிக்க வேண்டிய பொறுப்பை, உரியவர்கள் செயற்படுத்தி, மக்கள் தமக்கான சேவைகளை சிரமங்களின்றி, உரியமுறையில் பெற்றுக்கொள்வதற்கான வழிவகைகளை ஏற்படுத்த வேண்டும் என்பது அவசியமாகும்.



# செல்வந்தர் செலுத்தும் ஏழைகளின் வரி

## ‘ஸக்காத்’ எனும் வறுமை ஒழிப்புத் திட்டம்

ஏ.எச்.ஏ. ஹுஸைன்
husseinmedia000@gmail.com




இது புனித றமழான் நோன்பு காலம். அது இப்போது கிட்டத்தட்ட நிறைவடையும் தறுவாயை நெருங்கி விட்டது.

இஸ்லாமிய வருடத்தின் றமழான் மாதம் என்பது பல சிறப்புக்களைப் பெற்றது. அதிலொன்று உலக மாந்தருக்கு புனித நூலான அல்குர் ஆன் இறைவனால் அருளப்பட்டது. அதற்காக முஸ்லிம்கள் இறைவனுக்கு நன்றி செலுத்தும் பொருட்டு, நோன்பு நோற்று வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டு, தான தர்மங்களை வாரி வழங்க வேண்டும் என்பவை முக்கியமான அம்சங்கள்.

இஸ்லாமியப் பார்வையில் இறைவனுக்காக நோற்கும் நோன்போடு இணைத்ததாக, தானதர்மங்கள் செய்வதையும் புனித அல்குர்ஆன் கட்டளையிடுகின்றது

ஸக்காத் எனும் ஏழைகளுக்கான வரி, ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டில் கடமையாக்கப்பட்டது. அதே ஆண்டில்தான் ரமழான் நோன்பும் கடமையாக்கப்பட்டது. இது இஸ்லாத்தின் ஐந்து தூண்களில் ஒன்றாகவும் ஐம் பெரும் கடமைகளில் ஒன்றாகவும் அமைந்திருக்கிறது.

இல்லாத இயலாதவர்களுக்காக கட்டாயம் வழங்க வேண்டிய ஸக்காத் எனும் ஏழைகளுக்கான வரி பற்றி கிட்டத்தட்ட திருக்குர்ஆனில் 82 இடங்களில் தொழுகையுடன் சேர்த்து இணைத்துக் கூறப்பட்டிருக்கிறது.

“தொழுகையைக் கடைப்பிடிக்குமாறும், ஸக்காத்தை கொடுத்து வருமாறும், நாம் அவர்களுக்கு வஹீ மூலம் அறிவித்தோம்”. (அல்குர்ஆன் 21: 73)

“அல்லாஹ்வைத் தவிர வேறு எவரையும்-எதனையும் நீங்கள் வணங்கக்கூடாது, உங்கள் பெற்றோருக்கும், உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும் நன்மை செய்யுங்கள்; மனிதர்களிடம் அழகானதைப் பேசுங்கள்; மேலும் தொழுகையை முறையாகக் கடைப்பிடித்து வாருங்கள்; ஸக்காத்தையும் ஒழுங்காகக் கொடுத்து வாருங்கள்”. (அல்குர்ஆன் 2: 83)

வறுமையை ஒழிப்பதற்கு ஓர் அடிப்படையான அம்சமாகத்தான் ஸக்காத் அமைந்திருக்கின்றது. தனவந்தர்கள் மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியும் என்று இஸ்லாம் எதிர்பார்க்கின்றது.

நாட்டுப் பிரஜைகள் அனைவரும் அரசுகளுக்கு வரி செலுத்தும் ஒரு வழிமுறை இருக்க, இஸ்லாம் அதிலிருந்து மேம்பட்ட கண்ணோட்டத்தில் நாட்டிலுள்ள ஏழைகளுக்கு செல்வச் செழிப்பு மிக்கவர்கள் வரி செலுத்த வேண்டும் என்று கட்டாயமாக்கி இருக்கிறது.

ஸக்காத் அவர்களாக மனம் விரும்பி அதனைப் பகிர்ந்தளிக்கின்றபோது, அது வணக்கமாகவும் அமைந்து விடுகின்றது. ஏழைகளுக்கான இந்தக் கட்டாய தர்மக் கொடையை, இஸ்லாம் உடல் சார்ந்த இறை நம்பிக்கையின் பட்டியலில் சேர்த்துள்ளது. எனவேதான் அது தொழுகையுடனும் நோன்புடனும் சம்பந்தப்படுகின்றது.

காரணம், உடல் உழைப்பு மூலம் பொருளீட்டுவதினாலும், அதன்மூலம் கிடைக்கும் வருவாயிலிருந்து தானதர்மம் செய்வதினாலும், கடமையான ஏழை வரியான ஸக்காத்தை வழங்குவதினாலும், தர்மக் கொடையை உடல் சார்ந்த இறை நம்பிக்கையில் இஸ்லாம் இணைத்திருக்கிறது.

இஸ்லாத்தின் பார்வையில் தர்மம் என்பது 90 சதவீதம் அறம், நல்லறம் சம்பந்தப்பட்டவையாகும்.

ஸக்காத் என்பதுபோக




இஸ்லாத்தில் ‘ஸதகா’ என்கின்ற ‘உபரியான தர்மமும்’ இருக்கிறது. இதில் பொருள் சார்ந்த பங்களிப்பு குறைவாகத்தான் இருக்கும். அறம் சார்ந்த, உடலுழைப்பு சார்ந்த பங்களிப்பு அதிகமாக இருக்கும். ஸக்காத், ஸதகா ஆகிய தானதர்மங்கள் இஸ்லாத்தில் கட்டாயமாக்கப்பட்டு வலியுறுத்தப்பட்டுள்ளன.

பொருளாதாரமும் செல்வ வளமும் வசதி படைத்தோரிடம் மட்டுமே சுற்றிவராமல், அவை ஏழைகளிடமும் செல்வச் சுழற்சியும், மறுமலர்ச்சியும் ஏற்பட ‘ஸகாத்’எனும் ஏழை வரியான நலத்திட்டங்களையும், ‘ஸதகா’ எனும் தர்மக் கொடைகளையும் இஸ்லாம் செயல்படுத்தி, செல்வத்தை பரவலாக்கியது.

கடமையான ஸக்காத்தை நிறைவேற்றாதவர்களுக்கு கடுமையான தண்டனை உண்டு என இஸ்லாம் எச்சரிக்கிறது.

“இறைவன் யாருக்கேனும் செல்வத்தைக் கொடுத்து, அவன் அதற்கான ஸக்காத்தை நிறைவேற்றவில்லையாயின், மறுமை நாளில் அச்செல்வம், கடுமையான நஞ்சுடைய பாம்பாக மாறும். அது அவனது கழுத்தில் சுற்றிக் கொண்டு, அதன் விஷப் பற்களால் அவனது தாடையைக் கொத்திக்கொண்டே ‘நான்தான் உனது செல்வம்; நான் தான் உன் புதையல்’ என்று கூறும்” என நபி (ஸல்) அவர்கள் கூறிவிட்டு திருக்குர்ஆனிலுள்ள (3:180) வசனத்தை ஓதிக்காட்டினார்கள்”. (ஆதாரம்- புகாரி)

“ஸக்காத் நிதி ஸக்காத் அல்லாத பொருளாதாரத்துடன் கலந்துவிடுமானால் அந்தப் பொருளாதாரம் அழிந்துவிடும் என நபி (ஸல்) அவர்கள் அச்சமூட்டி எச்சரித்தார்கள்”. (ஆதாரம்- பைஹகீ)

துன்ப துயரங்களில் சிக்கித் தவிக்கின்ற ஏழை எளிய மக்களுக்கு செல்வந்தர்கள் தமது சொத்தில் ஒரு குறிப்பிட்ட பங்கை வழங்குவதன் மூலம் அந்த மக்களையும் கௌரவமாக கண்ணியமாக மரியாதையாக இந்த உலகத்திலே வாழ வைக்க முடியும் என்று இஸ்லாம் நம்பி, இந்த ஏழை வரியை கட்டாயமாக்கி வலியுறுத்துகின்றது.

ஒரு செல்வ வளம்படைத்தவர் தன்னிடமுள்ள செல்வத்தில் ஆண்டுக்கு இரண்டரை வீதம் ஏழை வரியாக,ஏழைகளுக்கு இதனை வழங்க வேண்டும் என்பதே இஸ்லாத்தின் கட்டாயச் சட்டமாகும். ஸக்காத் கொடுப்பது பிச்சை போடுவதற்கல்ல. அது ஏழைகளின் உரிமை என்று இஸ்லாம் வலியுறுத்துகின்றது.

ஏழை எளியவர்களின் துன்ப துயரங்களை நீக்குவதனூடாக வறுமை ஒழிப்பு என்பதுதான் ஸக்காத்தினுடைய அடிப்படையான நோக்கமாக இருக்கின்றது.

உலகத்திலே பிறக்கின்ற அத்தனை மனிதர்களுக்கும் செல்வந்தராகி, படாடோபத்தோடு வாழும் வாய்ப்புகள் கிடைப்பதில்லை. எல்லோரும் திறமையோடு, ஆற்றல் சக்தியோடு இருப்பதில்லை. இது பிரபஞ்ச ஒழுங்கமைப்பு.

ஆனால், உலகத்தில் பிறந்த அத்தனை பேரும் தமது தகுதிக்கேற்ப வாழ்ந்தாக வேண்டும். சக்தியும் ஆற்றலும் செல்வாக்கும் இல்லாதவர்கள் எப்படி இந்த செல்வங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்? எப்படி அவர்கள் கௌரவமாக மரியாதையாக இந்த உலகத்தில் வாழ முடியும்?

இயற்கை நியதியின் அடிப்படையில் ஏழை, பணக்காரன் என்போர் உலகத்தில் இருந்தேயாக வேண்டும். அவர்களும் இந்த உலகத்தில் வாழ வேண்டும். அவர்கள் வாழ்வதற்கு வாழ்வாதாரம் வேண்டும்.

சமூக பொருளாதாரக் கண்ணோட்டத்தில் உற்றுநோக்கினாலும் நிச்சயமாக ஸக்காத் வரி போன்றதொரு பொருளாதாரக் கோட்பாடு, நீதியான செல்வப் பகிர்வு உலகில் வேறெதுவும் இருக்க முடியாது. அப்படி எதுவும் எந்தப் பொருளியல் நிபுணர்களாலும் இதுவரை அறிமுகப்படுத்தப்படவும் இல்லை.

அல்குர் ஆனின் கட்டளைப்படி நபியவர்களின் வாழ்க்கை வழிமுறையில் இந்த ஸக்காத் அமல்படுத்தப்பட்டபோது, அடிமட்ட மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டிருந்தன. மனிதர்கள் சுபீட்சமாக வாழும் நிலை உருவானது; மறுமலர்ச்சி ஏற்பட்டது. ஒரு கட்டத்தில் ஸக்காத் பெறுவதற்கு ஏழைகள் எவரும் இல்லை என்ற நிலை உருவானது. இதை வரலாறு நெடுகிலும் நாம் காண்கின்றோம்.

ஆனால், காலவோட்டத்தில் நவீன சித்தாந்தங்களின் ஊடே, மனித சமூகம் அள்ளுப்பட்டதால் இந்த நடைமுறை இல்லாமற் போனது.

நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் பொருளாதாரப் பின்னடைவுகளுக்கும் அவஸ்தைகளுக்கும் ஆன்மீகப் பெறுமானங்கள் கணக்கிலெடுக்கப்படாததுதான் காரணம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அறமும் தருமமும் தழைத்தோங்க வேண்டிய இடத்தில், அதர்மம் ஆட்சி செலுத்தினால் நெருக்கடி நிலை உருவாகும் என்றும் சான்றோர் கூறிச் சென்றிருக்கின்றார்கள்.

ஸக்காத் வெறுமனே கோட்பாடுகளோ சிந்தனைகளோ அல்ல; அது நடைமுறைச்சாத்தியமான வறுமை ஒழிப்புத் திட்டமாகும்.

ஸக்காத் என்பது சமூகத்தில் வாழக்கூடிய ஏழை எளியவர்களுக்கும் நெருக்கடிகளில் சிக்கி வாழமுடியாமல் தவிப்போருக்கும் உரிமையான சொத்து. அடுத்தவர்களது உரிமைகளை, நாங்கள் சுரண்டி அபகரித்து வைத்துக் கொண்டு, வாழமுற்படுவது மிகப் பெரிய கொடிய பாவமாகும். வறியவர்களின் உரிமையை மறுப்பவர் பெரும் பாவி என்றும் இஸ்லாம் எச்சரிக்கின்றது.

செல்வம் திரட்டப்பட்ட விதம், செல்வம் பகிர்ந்தளிக்கப்பட்ட விதம் ஆகியவற்றில் இறைவனுக்குப் பயந்து கொள்ளும் ஒருவர், இம்மையிலும் மறுமையிலும் ஈடேற்றம் பெறுவார் என்று இஸ்லாம் கூறுகின்றது. எனவே, வசதி படைத்தோர் இந்தச் சந்தர்ப்பத்தில் இல்லாத இயலாதவர்களுக்கு வாரி வழங்க வேண்டும்.

# தொப்புள் கொடி உறவின் துடிப்புக்குத் தலைவணங்குவோம்

சமூக வலைத்தளங்களை அவதானித்தோமென்றால், மனம் ஒரு கணம் துடிதுடித்துப் போய்விடுகின்றது. செய்திகளைத் தவிர, ஏனைய பதிவுகள் மனதை நெருடுகின்றன. ஒவ்வொருவரும் படும் வேதனைகள் கொடுமையானவை. 'நோய்வாய்ப்பட்டிருக்கும் எனக்கு, என் மகனின் வாழ்வை நினைத்தால் பயமாக இருகிறது' எனத் தாயொருவர் பதவிவிட்டுள்ளார். இப்படி ஏராளமான ஏக்கப் பெருமூச்சுகளைக் காணமுடியும்.

நமது நாட்டின் பொருளாதார சீரழிவால், பலருடைய கனவுகளும் சின்னாபின்னமாகிவிட்டன. போஷாக்கான உணவு கிடைப்பதில்லை. அதனால், நோயெதிர்ப்பு சக்தி குறையும்; நோய்வாய்ப்படுவோரின் எண்ணிக்கை அதிகரிக்கும். சாதாரண மருந்துகளுக்குக் கூடத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதால், நோய்வாய்ப்பட்டிருக்கும் பிள்ளைகளை வைத்திருப்போர் விழிபிதுங்கி நிற்கின்றனர்.

எதற்கும், கையேந்த வேண்டிய நிலைமைக்குள் நாடு தள்ளப்பட்டு, பல மாதங்கள் உருண்டோடிவிட்டன. அதிலிருந்து மீளெழுவதற்கான அதிரடி நடவடிக்கைகளை எடுக்காது, 'குடும்பிச்சண்டை' பிடித்துக்கொண்டிருக்கிறது இந்த அரசாங்கம். இடைக்கால அரசாங்கமொன்றை நிறுவுவதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளதாக அறியமுடிகின்றது. ஆக, 'இருப்பை' தக்கவைத்துக்கொள்ள காய்நகர்த்தப்படுகின்றது.

எனினும், அண்டைய நாடான இந்தியா எமக்கு உதவிக்கரம் நீட்டியுள்ளது. சர்வ தேச நாணய நிதியத்துக்குச் சென்ற போதும், இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், எங்களுக்காக குரல்கொடுத்தார். நாணய நிதியத்துக்குச் சென்றதால், தங்களால் கடன்வழங்க முடியாத நிலைமையொன்று ஏற்பட்டுள்ளதாக சீனா சீறிப்பாய்ந்திருக்கிறது.

இந்திய அரசாங்கம் மட்டுமன்றி, தமிழக அரசாங்கமும் தங்களுடைய தொப்புள் கொடி உறவுகளுக்கு உதவிச்செய்வதாக ஏற்கெனவே அறிவித்திருந்தது. எனினும், இலங்கைக்கு உதவி செய்யவேண்டுமென, எமது நாட்டிலுள்ள தமிழ்த் தரப்புகளைச் சேர்ந்த தலைவர்கள் பலரும், தமிழக முதலமைச்சர் மு.கா.ஸ்டாலினிடம் வினயமாகக் கேட்டுக்கொண்டனர்.

இந்நிலையில்தான், இலங்கை மக்களுக்கு உதவ, மத்திய அரசின் அனுமதி கோரி தமிழக சட்டப்பேரவையில் தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலினால் கொண்டுவரப்பட்ட தீர்மானம், ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தை துணிவோடு எடுத்தமைக்காகவும், ஒருமனதாக நிறைவேற்றப்பட்டமையை இட்டும் நாமெல்லாம் தலைவணங்கவேண்டும்.

பொருட்களின் தட்டுப்பாடு, விலையேற்றம் ஆகியவற்றால், தொடர்ந்தும் வாழமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக, தமிழகத்துக்கு இலங்கையிலிருந்து அகதிகளாகச் சென்றவர்களின் கண்ணீர் கதைகளுக்கு தமிழகம் மனமுருகியுள்ளது. அதனால்தான், மனிதாபிமான அடிப்படையில் உதவி செய்வதற்காக, தமிழகத்திலிருந்து பல கோடி ரூபாய் மதிப்பிலான அரிசி, பால்மா, மருந்துப் பொருட்களை அனுப்பிவைப்பதற்கு மத்திய அரசிடம் அனுமதி கோரி, பிரேரணையும் நிறைவேற்றியுள்ளது.

ஆனால், அத்துமீறிவிட்டனர் எனக் குற்றச்சாட்டி தமிழக மீனவர்கள் மீது, வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டிருந்தது; பலரும் பாதிக்கப்பட்டனர். பெறுமதியான மீன்வளங்கள் நாசமாக்கப்பட்டுள்ளன. எனினும், நெருக்கடியான நேரத்தில், மனமுவந்து நேசக்கரம் நீட்டுவதற்கு முன்வந்திருக்கும் தொப்புள் கொடி உறவின் துடிப்புக்கு தலைவணங்க வேண்டும் என்பதுடன், தவறுதலாக அத்துமீறினாலும் மனிதாபிமானத்துடன் இனியாவது நடந்துகொள்ள வேண்டும் என்பதே எமது அவா!


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

ஒருவரைத் தூற்றிய நபர், பெரும் சாதனை செய்தவர் போல் திருப்தி அடைந்தால், அது ஒரு வக்கிர புத்தி.

ஆனால், இந்தத் தற்காலிக சந்தோசத்துக்குப் பின்னால், அவர்கள் பெறும் எதிர்வினைகள் பாரதூரமானவை. துன்பப்பட்ட நபர் அதை மறந்து, தன்னை அவமதித்தவருக்கு உதவும் போது, அதைவிட வெட்கம் வேறுஇல்லை.

அநேகர் அவசர புத்தி காரணமாக, வாயிலிருந்து கடும் சொற்களை வீசுவதுண்டு. திட்டுவது கோழைத்தனம் அல்லவா?

எளிய மக்களிடம் மட்டுமே சண்டித்தனம் செய்யும் பேர்வழிகள், ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் வலியவர்களிடம் அகப்படுவார்கள்.

அலைபாயும் மனம் எதுவும் சொல்லும். படித்த அறிவுள்ளவர்கள் கூட, ஆணவத்துடன் இயங்குவதுண்டு. ஒழுக்கம் என்பது பொதுவான பண்பு. இதில் படித்தவன் படிக்காதன் என்று ஏது பேதம்? எல்லோரும் வேண்டப்பட்டவர்கள்; எவரையும் நிராகரிக்கத் தேவையில்லை. நெஞ்சத்தைப் பண்படுத்துவதே தூய கலையாகும். தங்களுக்கு விருப்பம் இல்லாததை, மற்றவர்களிடம் திணித்தல் கூடாது. சிறப்பானதை மட்டும் யாவருக்கும் வழங்குக.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# அரசியலாகிப்போன மே தினம்

**லக்ஸ்மன்**

புதிய பிரதமருடன் சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்திருப்பதாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருக்கிறார். இதுவும் ஒருவகையில் மேதினத்துக்கான செய்திதான். இது மகிழ்ச்சியான செய்தியும்கூட! தொழிலாளர் தினத்துக்கிடையில் இது நடைபெறுமானால் தொழிலாளர்கள் மகிழ்ச்சியுடன் மே தினத்தைக் கொண்டாடுவார்கள். இல்லையானால் ஏக்கத்துடன் எதிர் கொள்வார்கள்.

அரசியல் ஆதாயத்துக்காகவே மே தினம் பயன்படுத்தப்பட்டு வருகின்றமையை இப்போது காண்கிறோம். அத்தோடு இன, மத, மொழி என இன்னோரன்ன வேறுபாடுகளுடனும் தொழிலாளர் தினம் தற்போது நடைபெறுகின்றமையையும் காணலாம். அதனாலேயே அரசியலாகிப்போன மேதினம் என்கிற பார்வை தொக்கிக் கொள்கிறது.

தொழிலாளர்கள் சாதி, மதம், இனம், மொழி ஆகியவற்றைக் கடந்து 'தொழிலாளர்கள்' என்னும் ஒற்றைச் சொல்லில் ஒன்றிணைந்து, உணர்வுடன் போராட வேண்டும் என்பதே தொழிலாளர்தினம் எனும் மேதினத்தின் தாரக மந்திரமாகும். ஆனால் நடப்பவை என்னவோ வேறுதான்.

தொழிலாளர் நாள் அல்லது உழைப்பாளர் நாள் என்பது உலகம் முழுவதும் ஆண்டுதோறும் கொண்டாடப்படும் விடுமுறை நாளாகும். அது தொழிலாளர் ஒன்றிய இயக்கத்திலிருந்து தொழிலாளர்களின் பொருளாதாரம், சமூக சாதனைகளைக் கொண்டாடுவதை குறிக்கின்றது. உலகின் அதிகபட்சமான நாடுகள் தொழிலாளர் தினத்தை மே முதலாம் நாள் கொண்டாடுகின்றது. கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகள் செப்டெம்பர் மாதத்தின் முதல் திங்கட்கிழமையில் கொண்டாடுகின்ற வழமை காணப்படுகிறது. பல நாடுகளில் மே முதலாம் திகதி தேசிய விடுமுறை தினமாக உள்ளது.

தொழிலாளர் உரிமைகளை வலியுறுத்தி முன்னெடுக்கப்படும் மேதின அறைகூவலானது, இலங்கையின் இன்றைய நிலையில் மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கானதாக மாறிப்போயுள்ளது. இதனையே அதிகமான அரசியல் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் தங்களுடைய மே தின அறைகூவல்களாக தயார் செய்கின்றன. நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பெரும் பொருளாதார நெருக்கடி மக்களுக்கு வாழ்வாதாரம் குறித்து கடும் சுமையைக் கொடுத்திருக்கின்ற நிலையில், நாளை மே தினம் கொண்டாடப்படுகிறது.

ஒவ்வோர் அரசியல் கட்சியும், தொழிலாளர் அமைப்புகளும் தமது அறைகூவல்களுக்காகத் தயாராகி வருகின்றன. அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்ற கோசம் இம்முறை தொழிலாளர் தினக் கோசங்களில் முக்கியமானதாக இருக்கிறது. 'கோட்டா வீட்டுக்குப் போ' கோசம் நாட்டின் தலைநகரில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. இது எப்போது ஓயும் என்பது தெரியாமலேயே இருக்கிறது. இருந்தாலும் இந்தத் தொழிலாளர் தினத்திலேனும் நல்லதொரு முடிவு கிட்டவேண்டுமென்றே எல்லோரும் எதிர்பார்க்கின்றனர். அது நடைபெறவேண்டும்.

"உலக தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்" என்று அவர்களின் உரிமைகளைக் கோரி தோற்றம் பெற்ற தொழிலாளர் தினம், அரசியல் கட்சிகளையும் தொழிற் சங்கங்களையும் வெகுஜன அமைப்புகளையும் தனி மனிதர்களையும் ஒன்று சேர்த்தது என்பது தான் வரலாறு. 2019ஆம் ஆண்டின் இறுதிவாக்கில் சீனாவில் பரவத் தொடங்கிய கொரோனா அச்சுறுத்தல் காரணமாக, கடந்த வருடத்தில் மே தினத்தைக் கொண்டாட முடியாத நிலை உலகளவில் ஏற்பட்டது. ஆனாலும் மே தினத்தை தொழிலாளர்கள் அனைவரும் அமைதியுடன் நினைவு கூர்ந்திருந்தனர். இலங்கையின் பொருளாதார நெருக்கடியுடன், அந்த நிலைமை இவ்வருடத்தில் சற்று மாற்றம் பெற்றிருக்கிறது.

சிக்காக்கோவில் வெடித்த உரிமைப்புரட்சி முழு உலகையுமே மிரட்சி கொள்ள வைத்தது என்னவோ உண்மை. 8 மணி நேர வேலை என்ற தொனிப்பொருளை இலக்காக கொண்டு ஆரம்பமான தொழிலாளர் போராட்டம், பிரான்ஸ், அவுஸ்திரேலியா, ரஷ்யா, அமெரிக்கா என்று விரிவடைந்து 18ஆம் நூற்றாண்டு இறுதியிலும் 19ஆம் நூற்றாண்டு ஆரம்பத்திலும் தொழிலாளர் விடுதலைக்கான உணர்வலைகளைப் பரப்பியது.

வளர்ச்சியடைந்த நாடுகளில் தொழிலாளர்களின் உழைப்பு சுரண்டப்பட்டு அவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டமைக்கு எதிரான போராட்டங்கள், நாடுகளைக் கடந்து முன்னெடுக்கப்பட்டிருந்தன. அதன் வெற்றிகளால் தொழிலாளர்களுக்கான தினம் ஒன்று உருவாக்கமும் பெற்றது.

இருந்தாலும் தொழிலாளர்களின் வர்க்க உணர்வின் வெற்றியாக உள்வாங்கப்படவேண்டிய மே தினத்தை முதலாளி வர்க்கம் தமது மேலாதிக்கத்தின் பிடிக்குள் வைத்துக் கொண்டிருக்கிறது. தொழிலாளர் உரிமைகளை நிலை நிறுத்துவதற்காக நமது நாட்டில் சட்டங்கள் உருவாக்கப்பட்டு, நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டாலும் தொழிலாளர்களுடைய உரிமைகள் மீறப்படுகின்ற சந்தர்ப்பங்கள் இருந்து கொண்டேயிருக்கின்றன. தொழிற்சங்கம் சார்ந்த அரசியல் முறைமை நடைமுறையிலிருப்பதால் இந்த அவல நிலைமை இருப்பதாகவும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுவருகின்றன.

அதேநேரத்தில், தொழிலாளர்களுக்குத் தங்களுடைய உரிமைகள் தொர்பிலான அறிவின்மையும் தொழில் உறுதிப்பாட்டின் அச்சங்கள் காரணமாகவும் ஆபத்தான நிலைகளும் ஏற்படுகின்றன. மே தின இலட்சியமும் நோக்கமும் அதன் பெறுபேறுகளும் சிதைவடைந்து போயுள்ள நிலைமையில், நாம் இம்முறையும் தொழிலாளர் தினத்தைக் கொண்டாடுகின்றோம். இதை மாற்றியமைக்க மனம் வைக்காத தொழிலாளர் அமைப்புகளும் புரிதல் இல்லாத மக்களும் இருக்கும் வரைக்கும், மே தினம் பழித்துச் சொல்லும் தினமாகவே இருக்கப்போகிறது என்பது மாத்திரம் உண்மை.

உலகத்தின் மேம்பாடும், வளர்ச்சியும் தொழிலாளர்களின் முயற்சிகளிலேயே தங்கியுள்ளது. இருந்தாலும், அதனை உணராத முதலாளி வர்க்கத்தின் செயற்பாடுகளால் தோன்றும் அரசியலும், மக்களான தொழிலாளர்களை ஏமாற்றும் கட்சிசார் அரசியல்களுமே உலகில் மாத்திரமல்ல, நமது நாட்டிலும் காணப்படுகின்றன. முதலாளி வர்க்கம் தொழிலாளர்களைப் பிழிந்தெடுக்கும் கலாசாரம் மிகவும் மோசமானதே. அடிமட்ட கூலித் தொழிலாளர்கள் முதல், முகாமைத்துவ நிலை வரையில் தொழிலாளர்களாக ஒற்றுமைப்படுகின்ற நிலைமை தோன்றும் போது ஓரளவுக்கேனும் தொழிலாளர்களின் உரிமைகள் மதிக்கப்படுகின்ற தன்மை உருவாகலாம்.

இலங்கையில் காணப்படுகின்ற தொழிற்சங்கங்களில் பெரும்பாலானவை அரசியல்வாதிகளின் அல்லது அரசியல் கட்சிகளின் கீழே இயங்குகின்ற நிலைமையானது தொழிலாளர்களது உரிமைகளை வென்றெடுப்பதிலும் அவற்றினைத் தக்கவைத்துக்கொள்வதிலும் பாரதூரமான ஆபத்துடையதாகும். ஆனாலும் அவற்றின் அங்கத்தவர்களாகிய தொழிலாளர்கள் அதனை உணர்ந்து கொள்வதில்லை என்பதே வெளிப்படை.

அடுத்து தொழிலாளர்கள் சார் பாகுபாடும் பாரபட்சமும் குறித்த விடயம் பார்வைக்குட்படுத்தப்படுகிறது. தொழிலாளர் என்று வருகின்றபோது ஆண், பெண் என்ற பாகுபாடும் பாரபட்சமும் காணப்டுகின்றமை இங்கு குறிப்பிடப்பட வேண்டும். பெண்களைப் பொறுத்தவரையில் தொழில்களைத் தக்கவைத்துக்கொள்ளுதல், முன்னேற்றங்களைப் பெற்றுக்கொள்ளுதல், கல்வித்தராதரங்களை உயர்த்திக்கொள்ளுதல் என பல விடயங்களில் சிக்கல்கள் காணப்படுகின்றன.

அந்தவகையில்தான் தொழிலாளர்களது உரிமைகள் சார்ந்த கற்கைகளும் அது தொடர்பான அறிவூட்டல்களும் முக்கியம் பெறுகின்றன. தொழிலாளர்களாகிய அடிமட்ட மக்கள் தங்களுடைய வாழ்வாதாரத்தினை தங்களுக்கு முக்கியமானதாகப் பார்க்கின்ற வேளை அவர்களின் உரிமைகளை மறந்துவிடுகிறார்கள். அல்லது அவ்வாறான உரிமைகள் இருக்கின்றனவா என்பதே தெரியாமலிருந்துவிடுகிறார்கள். இந்த இடத்தில்தான் தொழில்சார் உரிமைகளுக்காக குரல் கொடுக்கின்ற அமைப்புகளும் நிறுவனங்களும் தேவைப்படுகின்றன. அத்துடன், அவை முக்கியமாகத் தொழிலாளர்களை பாதுகாக்க வேண்டியது அரசியல் தரப்பிடமிருந்தேயாகும்.

இந்த இடத்தில், கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சர்வதேச தொழிலாளர் அமைப்பின் மரபுகளை ஆவணத்துடன் மாத்திரம் மட்டுப்படுத்த வேண்டாமென சர்வதேச தொழிற்சங்கம் ஒன்று அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தமை நினைவில் கொள்ளப்படவேண்டும். தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்கு 'இன்ரஸ்ரி ஓல்' தொழில்துறை சர்வதேச தொழிற்சங்க கூட்டமைப்பு இந்தக் கோரிக்கையை விடுத்திருந்தது.

இந்த அமைப்பானது இலங்கை உட்பட 140 நாடுகளில் 50 மில்லியன் தொழிலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு சர்வதேச தொழிற்சங்க கூட்டமைப்பாகும். இலங்கையின் தொழில் சட்டம், சர்வதேச தொழிற்சட்டங்கள் காணப்பட்டாலும் தொழிலாளர்களது உரிமைகள் மீறப்படுவது சாதாரணமே என்பது இதன் மூலமான உதாரணமாகும்.

நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதாரச் சிக்கல் நிலையானது உண்மையில் வசதிபடைத்தவர்களையும், நடுத்தர மக்களையும் பாதித்ததோ இல்லையோ பெருந்தொகையாக இருக்கின்ற தொழிலாளர் வர்க்கத்தினை வெகுவாகப்பாதித்திருக்கிறது. மக்களிடம் காணப்படுகின்ற அச்சமானது என் குடும்பத்தின் வாழ்நிலை என்ன என்பதே ஆகும். இவற்றுக்கான தீர்வினை யார் கொண்டுவருவார்கள் என்றே இம்முறை தொழிலாளர் வர்க்கம் ஏக்கத்துடன் மேதினத்தினை கொண்டாடுகிறது என்று சொல்வதனைவிடவும் எதிர் கொள்கிறது என்றே சொல்ல வேண்டும்.

நீண்டகாலமாக நெருக்கடிகளையே எதிர்கொள்ளும் தொழிலாளர்கள் நிமிர்ந்து நிற்க, இம்முறையேனும் மீட்சி கிடைக்கட்டும்.

## கடிதங்கள்

### காட்டு யானைகளை கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

ஒலுவில், அஷ்ரப் நகர் மீள்குடியேற்றக் கிராமத்தில் அதிகரித்து காணப்படும் காட்டு யானைகளின் தொல்லைகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையத்துக்கு வரும் யானைக் கூட்டம், இரவு நேரங்களில் கிராமங்களுக்குள் புகுந்து, வீட்டுத் தோட்டங்களையும் சேனைப் பயிர்களையும் சேதப்படுத்தி வருவதால், பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது சிறுபோக வேளாண்மைச் செய்கை ஆரம்பிக்கப்பட்டு உள்ளதால், நெற் பயிர்களை துவசம் செய்வதாகவும் தெரிவிக்கின்றனர். இக் கிராமத்தில் வாழும் மக்கள், பீதியின் காரணமாக மாலை நேரங்களில், தங்கள் குழந்தைகளுடன் குடியிருப்பை விட்டு வெளியேறி, பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று, காலையில் வீடு திரும்பும் அவலநிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர். பாடசாலை மாணவர்கள், பெண்கள், சிறுவர்கள், நோயாளர்கள் போன்றோர் இதனால் வெகுவாகப் பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன் எல்லைக்கிராமங்களான சம்புநகர், ஹிறாநகர், ஆலிம்நகர் ஆகிய பிரதேசங்களிலும் யானைத் தொல்லை அதிகரித்து காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அதிகரித்துக் காணப்படும் காட்டு யானைத் தொல்லையை கட்டுப்படுத்துவதற்கு, எல்லைக் கிராமங்களில் மின்சார வேலிகளை நிர்மாணித்துத் தருமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எம்.எஸ்.எம். ஹனீபா

கோட்டைக்கல்லாறின்

# ஆயிரம் வருட மர்மம் அவிழ்கின்றது



வ. சக்திவேல்
shagthivel@gmail.com





ஆண்டாண்டுகாலமாக ஆதிக்குடிகளாக வாழ்ந்து வந்த தமிழினத்தின் தொன்று தொட்டு வந்த மரப்புகளைப்பேணிப் பாதுகாப்பதை தமிழினம் இன்றும் கைக்கொண்டு வருகின்றது. அதில் ஓர் அங்கமாக 'போர்த்தேங்காய்' அடிக்கும் நிகழ்வைக் குறிப்பிடலாம்.

எங்களுடைய மூதாதையர் காலத்திலிருந்து இற்றைவரையில் போர்த்தேங்காய் அடிக்கும் நிகழ்வு கோட்டைக்கல்லாறு கிராமத்தில் இருந்து வருகின்றது. இதற்கு மிக நீண்ட வரலாறும் உண்டு. சோழர் காலத்தில், சோழர்கள் கோமாரி பகுதியிலிருந்து போரில் பின்வாங்கியதன் நிமித்தம், அவர்கள் கோட்டைக்கல்லாறு கிராமத்துக்கு வந்துள்ளார்கள்.

அப்போதிருந்தே கோட்டைக்கல்லாறு கிராமத்தில் வடசேரி, தென் சேரி என இரு பிரிவுகளாக வாழ்ந்து வந்தார்கள். சோழர்களின் பரம்பரையாகத்தான் கோட்டைக்கல்லாறு கிராமத்திலுள்ள மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் கொண்டு வந்த மரபுதான் கிராமத்தில் 'வடசேரி', 'தென்சேரி' ஆகும்.

கி.பி 10 தொடக்கம் 12 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் ஆதிக்கம் செலுத்திய சோழர் காலத்திலிருந்து இன்று வரைக்கும், இந்தப் போர்த்தேங்காய் அடிக்கும் செயற்பாடு சிறப்புடன் இடம்பெற்று வருகின்றது.

இவ்வாறான நிலையில், வடசேரி வாரத்துக்கு பிள்ளையாரும், தென்சேரி வாரத்துக்கு கண்ணகி அம்மனும் சித்திரிக்கப்படுகின்றன. அதிலும், கோட்டைக்கல்லாறு



கிராமத்தில் வடக்கு பக்கமாக பிள்ளையார் ஆலயமும், தெற்குப் பக்கமாக கண்ணகியம்மன் ஆலயமும் அமைந்துள்ளன.

இந்நிலையில்தான், சித்திரை வருடப்பிறப்புக்கு அடுத்த தினத்திலிருந்து போர்த்தேங்காய் அடிக்கும் நிகழ்வு நடத்தப்பட்டு வருகின்றது. இதற்கு மிக முக்கியமாக, கண்ணகி அம்மனையும் பிள்ளையாரையும் போர்த்தேங்காய் அடிக்கும் நிகழ்வின் மூலம் சந்தோசப்படுத்த வேண்டும் என்று காலாகாலமாக நம்பிவருகின்றார்கள். ஆகவே, இது ஒரு கேளிக்கையான நிகழ்வு அல்ல!

கோட்டைக்கல்லாறு கிராமத்தில் தாய்வழி வருவது குடியாகவும் தந்தை வழி வருவது வாரமாகவும் கருதப்படுகின்றது. தந்தை என்ன வாரமாக இருக்கின்றாரோ, அவரது பிள்ளைகளும் அந்த வாரத்துக்குள் அமைகின்றார்கள். உதாரணமாக, தென்சேரி வாரத்தின் பெண்ணை வடசேரி வாரத்து ஆண் திருமணம் செய்தால், அவர்களுக்குப் பிறக்கின்ற பிள்ளைகளும் தந்தை வழியாக வடசேரியாகத்தான் கருதப்படுவார்கள். ஆனால் மனைவி தென்சேரி வாரமாகத்தான் இருப்பார்.

இவ்வாறுதான் கோட்டைக்கல்லாறு கிராமத்திலுள்ள மக்கள் வடசேரி, தென்சேரி எனப் பிரிந்து, போர்த்தேங்காய் அடிக்கும் நிகழ்வை மேற்கொள்கின்றார்கள். 1978ஆம் ஆண்டு, சூறாவளி தாக்கியதன் பின்னர் சமமாக தேங்காய்கள் பிரிக்கப்படும். உதாரணமாக வடசேரிக்கு 30தேங்காய் என்றால், தென்சேரிக்கும் 30தேங்காய்கள் எனப் பிரிக்கப்படும், குறிப்பாக 9, 11, 13, என ஒற்றையிலக்கத்தில்தான் தேங்காய்கள் சரிசமமாக பிரிக்கப்படும்.

முதலாவதாக தென்சேரியைச் சேர்ந்த நபர், வடசேரிப்பக்கமாக தேங்காய் ஒன்றை வீசுவார். அப்போது வடசேரியைச் சேர்ந்தவர், அவரது கையில் வைத்திருக்கும் தேங்காயால், வீசி வருகின்ற தேங்காய்க்கு அடிப்பார். அதில் இரண்டு தேங்காய்களும் உடைந்துவிடும். அல்லது ஏதாவது ஒன்று மாத்திரம் உடையும்; அல்லது, இரண்டும் உடைபடாமலும் போகும்.

இவ்வாறு, மாற்றி மாறி தேங்காய்கள் வீசப்படும். இறுதியில் எந்தச் சேரிப்பக்கம் தேங்கய்கள் மீதமுள்ளதோ அப்பக்கமே வெற்றி பெற்றதாகக் கருதப்படும். சுமார் ஒரு வாரகாலமாக போர்த்தேங்காய் அடிக்கும் நிகழ்வு கோட்டைக்கல்லாது கண்ணகியம்மன் ஆலய முன்றலில் மாலை ஐந்து மணிமுதல் நடைபெறும்.

எனினும், இறுதியில் தென்சேரி வாரத்துக்கு அதாவது கண்ணகி அம்மன் பக்கம் வெற்றி பெற்றதும், வருடத்துக்கான தேங்காய் அடிக்கும் நிகழ்வு முடிவுறுத்தப்படும். போர்த்தேங்காய் இவ்வாறுதான் அடிப்பது என்ற முறைகளை மேற்கண்டவாறு தெரிவித்தார் கோட்டைக்கல்லாற்றைச் சேர்ந்த ஓய்வு பெற்ற சிறைச்சாலை உத்தியோகஸ்தர் ஞானமுத்து தருமரெட்ணம்.

கோட்டைக்கல்லாறு கிராமத்தில் ஆதிகாலத்திலிருந்து கொம்புமுறி வழிபாடு இடம்பெற்று வந்தது. பின்னர், அது இடைப்பட்ட காலத்திலிருந்து விடுபட்டுள்ளது. ஆனாலும், போர்த்தேங்காய் அடிக்கும் நிகழ்வு, இற்றைவரையில் இடைவிடாமல் தொன்றுதொட்டு, கிராமத்தில் அமைந்துள்ள கண்ணகியம்மன் ஆலய முன்றலில் இடம்பெற்று வருகின்றது.

"1978ஆம் ஆண்டு இடம்பெற்ற மிகப்பெரிய சூறாவளியில் கிராமத்திலிந்து அனைத்து தென்னை மரங்களும் முறிந்து அவ்வருடத்தில் போர்த்தோங்காய் அடிப்பதற்கு தேங்காய் இல்லாமல் அவதியுற்றோம். பின்னர் கிராமத்திலுள்ள மக்களுக்கு அம்மன் நோய் பீடித்து விட்டது. அப்போது, போர்த்தேங்காய் அடிக்காத காரணத்தால்தான் அம்மன் நோய் பீடித்ததாக மக்கள் ஐதீகம் தெரிவித்தனர். பின்பு 1980ஆம் ஆண்டு, திருக்கோவில் கிராமத்துக்குச் சென்று தேங்காய்கள் எடுத்துவந்து, இதே இடத்தில் வைத்து போர்த்தேங்காய் அடித்தோம். பின்பு அம்மன் நோய் இல்லாமல்போய்விட்டது. இவ்வாறு தொன்றுதொட்டு நாம் செய்து வருகின்ற நிகழ்வுதான் இந்தப் போர்த்தேங்காய் அடிக்கும் நிகழ்வாகும்" என தெரிவிக்கின்றார் முதியவரான முருகேசு கிட்ணன்.

இந்தப் போர்த்தோங்காய் அடிக்கும் நிகழ்வில் இறுதியில் வெற்றிபெறும் சேரியினர் (வாரத்தினர்), மாட்டு வண்டியில் ஒலிபெருக்கிகளைப் பொருத்தி, கிராமத்திலுள்ள அனைத்து வீதிகளுக்கும் சென்று, தமது வெற்றிக்களிப்பைக் கொண்டாடி வருவர். அதன்போது கிராமத்து மக்கள் நன்கொடைகளையும் வழங்குவார்கள். அவ்வாறு கிடைக்கப்பெறும் நன்கொளைகளைக் கொண்டு, அன்றையதினம் கலை நிகழ்வுகளும் அரங்கேற்றப்படும்.

கொரேனா தாக்கத்தால் 2021ஆம் ஆண்டு போர்த்தேங்காய் அடிக்கப்படவில்லை. போர்த்தோங்காய் அடித்தல் என்றால் கிராமமே எழுச்சி கொள்ளும். சிறுவர்கள், பெரியவர்கள், முதியவர்கள் உள்ளிட்ட அனைவரும், அனைத்து கவலைகளை மறந்து, சந்தோசத்துடன் காணப்படுவார்கள். போர்த்தேங்காய் அடித்தல் என்றால், எமது கிராமத்தில் மாத்திரம்தான் வருடாந்தம் இடம்பெற்று வருகின்றது" என பூரிப்புடன் தெரிவிக்கின்றார் கமலராணி.

சோழர் காலத்தில் வடசேரி என்பது ஒரு படைப்பிரிவாகவும், தென்சேரி என்பது மற்றுமொரு படைப்பிரிவாகவும் காணப்பட்டிருந்தன. அப்போது சோழர்களிடமிருந்து பொலநறுவையை முதலாம் விஜயபாகு கைப்பற்றியவுடன் சோழர்கள் மறைந்து வாழவேண்டிய சூழலுக்குள் தள்ளப்பட்டார்கள். அப்போது கோட்டக்கல்லாறு ஒரு தீவாக, சுற்றிவர நான்குபக்கமும் நீரால் சூழப்பட்டிருந்த ஒரு கிராமமாகும்.

சோழர்களின் வாரிசுகளாக, எச்சங்களாக, பரம்பரையாக மக்கள் வாழும் இடமாகத்தான் இற்றை வரையில் கோட்டைக்கல்லாறு கிராமம் திகழ்கின்றது. சோழர்கள் விட்டுச் சென்ற பழக்கவழக்கங்கள், நடைமுறைகள், சமய நெறிமுறைகளைத்தான் இற்றைவரைக்கும் இங்குள்ள மக்கள் கைக்கொண்டு வருகின்றார்கள். அதன் ஓர் அங்கம்தான் போர்த்தேங்காய் அடித்தல் பார்க்கப்படுகின்றது.

கிழக்கில், கோட்டக்கல்லாறு கிராமத்தில் போர்த்தேங்காய் அடிப்பதும், அதுபோல் இலங்கையில் இன்னும் சில தமிழ் மற்றும் சிங்களக் கிராமங்களிலும், போர்த்தேங்காய் அடிக்கும் பாரம்பரியம் உள்ளதாகவும், இறுதியாக ஆட்சிசெய்த குலோத்துங்கன் எனும் சோழ மன்னனின் மனைவியின் பெயர் சௌந்தரி எனவும், அந்த சௌந்தரி என்ற பெயரில் இங்குள்ள மக்கள் அவர்களது பிள்ளைகளுக்கு தற்போதும் பெயர் சூட்டியுள்ளார்கள். அதுபோல் எங்கெங்கல்லாம் போர்த்தேங்காய் அடிக்கும் பாரம்பரியம் உள்ளதோ, அங்கங்கெல்லாம் சோழர்கள் வாழ்வதாகவும், அவர்கள் கால ஓட்டத்தினுடே வேறு மொழி, கலை, கலாசாரம், மதங்களைப் பின்பற்றுபவர்களாகவும் வாழ்கின்றார்கள். வாழ்வியலைத் தேடிய ஓட்டத்தில் அது தவிர்க்க முடியாத ஒன்றாகும்" என இக்கிராமத்தைச் சேர்ந்த புத்திஜீவிகள் கருதுகின்றனர்.

இந்தியாவில் 9ஆம் நூற்றாண்டு காலத்தில் வலிமை பெற்று விளங்கிய சோழ மன்னர் பரம்பரை, பின்னர் வங்களதேசம், மலேசியா, மியன்மார், இலங்கை போன்ற நாடுகளுக்கும் படையெடுத்து, இலங்கையில் கி.பி 10தொடக்கம் 12ஆம் நூற்றாண்டுகளில் வலிமை பெற்று விளங்கியிருந்தார்கள்.

அந்தப் பரம்பரையினரின் எச்சங்களாகவும் அவர்கள் விட்டுச் சென்ற அனைத்து பாரம்பரியங்களையும் பேணும் மக்களாகவும் மட்டக்களப்பு மாவட்டத்தின் கோட்டைக்கல்லாறு கிராம மக்கள் திகழ்கின்றார்கள்.

நாளைய தேவை:

# வீட்டுக்கொரு வீட்டுத்தோட்டம்


செ.தி. பெருமாள்



வீட்டுத்தோட்டம் அமைப்பதன் முக்கியத்துவம் இன்று இலங்கை மக்களால் வெகுவாக உணரப்படுகின்றது. வீட்டிலேயே தோட்டம் அமைக்க, பரந்துவிரிந்த இடம் தேவையில்லை. பல்கனி அல்லது மொட்டைமாடி, சிறிய இடவசதி கூடப் போதும். வீட்டில் இருக்கும் இடவசதிக்கு ஏற்றவாறு காய்கறிகளை பயிரிடலாம். சின்னச் சின்ன நுணுக்கமான விடயங்களை கையாண்டால் மட்டும் போதும்.

அந்த இடமும் இல்லையென்பவர்கள், வெயில்படும் இடத்தில் தொங்கும் செடிகள் அமைப்பது, வீட்டின் கைப்பிடிச் சுவர்களில் சிறிய தொட்டிகள் அமைத்து பராமரிப்பது என நிறைய வழிகள் இருக்கின்றன.

நீங்கள் எந்தப் பொருளில் வேண்டுமானாலும் செடி வளர்க்கலாம். ஒரே மாதிரியான தொட்டிகள்தான் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. குறைவான இடமே இருக்கிறது என்பவர்கள், வீட்டில் இருக்கும் பழைய சப்பாத்து அல்லது கப்களில் மண்ணை நிரப்பி கீரைகள், மூலிகைச் செடிகளை வளர்க்கலாம்.




தொடர்மாடி வீடுகள் என்றாலும்கூட, தொட்டிகளைத் தொங்கவிட்டு கீரை, பூஞ்செடி வகைகளை வளர்க்கலாம். பழைய குடம், கேன், வாளிகள், டயர்கள் என எதில் வேண்டுமானாலும் செடிகளை வளர்க்க முடியும். தக்காளி, கீரை போன்ற தாவரங்களை வளர்க்க வெறும் ஆறு அடி முதல் எட்டு அடி வரை தோட்டத்தில் காலி இடம் இருந்தால் போதும்.

பழைய பொருட்களில் செடிகள் வளர்க்கிறீர்கள் எனில், தேவையில்லாத தண்ணீர் வெளியேறும் வகையில் துளைகள் போட்டுக்கொள்ளுங்கள்.

பழைய தண்ணீர் போத்தல் போன்று நீள அகலம் குறைவான பொருட்களில் புதினா, கொத்தமல்லி, அழகுச்செடிகள் என குறைந்த அளவில் வேர் படரும் செடிகளை வளர்க்க வேண்டும்.

பழைய குடங்கள், வாளிகள், போன்றவற்றில் கத்தரி, தக்காளி, எலுமிச்சை போன்ற செடிகளை வளர்க்கலாம்.






தோட்டம் அமைக்க திட்டமிடுகிறீர்கள் எனில் காய்கறி, கீரை, பழங்கள், பூஞ்செடி எனக் கலந்து தோட்டம் அமைத்தால் எல்லாப் பயன்களும் கிடைக்கும்.

மாச்சத்து அடிப்படையிலான பிரதான உணவுகளான மரவள்ளிக்கிழங்கு, வத்தாளை கிழங்கு, உருளைக்கிழங்கு, குரக்கன், சோளம் போன்றவைகளுடன் புரதத்துக்கு மாற்றாக உளுந்து, பருப்பு, பச்சைப்பயறு, நிலக்கடலையும் கீரை, காய்கறிகளும், பழமரங்களும் இருக்க வேண்டும்.

வீட்டு தோட்டத்தில் குறைவான இடத்தில் தக்காளி , கத்தரிக்காய், மிளகாய் செடிகளை வளர்க்கலாம். இடவசதி இருக்கும் பட்சத்தில் இரண்டு பாத்திகளில் கீரை, வெண்டிக்காய், அவரைக்காய் பூசணி போன்ற கொடிவகை காய்கறிகளையும் வளர்க்கலாம்.





### தோட்டம் அமைக்கும் முறை:

இடத்தை மண்வெட்டியால் நன்கு கொத்தி சமன்படுத்தி, பாத்திகளை ஏற்படுத்த வேண்டும். செடிகள் நன்கு செழித்து வளர வளமான மண் மிக முக்கியம். எந்த வகை செடியாக இருந்தாலும் மண், தொழுவுரம், தென்னங்கழிவு ஆகியவற்றை 2:1:1 என்ற விகிதத்தில் சேர்த்து தொட்டிகளில் நிரப்ப வேண்டும். அடி உரமாக வேப்பம் புண்ணாக்கு, ஆட்டுச்சாணம், மாட்டுச் சாணம், காய்கறிக்கழிவுகள் போன்றவற்றைப் பயன்படுத்தலாம். மாட்டு சாணம் அல்லது ஆட்டு சாணத்தை தொழுவுரமாக பயன்படுத்தும்பொழுது நமக்கு நல்ல விளைச்சல் கிடைக்கும்.

தயார் செய்த மண் கலவையில் உடனடியாக விதைகளை விதைத்து விடக்கூடாது. மண்ணைத் தொட்டியில் நிரப்பி, ஐந்து நாள் தண்ணீர் தெளிக்க வேண்டும். இதனால் மண்ணில் நுண்ணியிரி உருவாகும். செடிகளின் வளர்ச்சியும் நன்றாக இருக்கும்.

நீங்கள், செடி வளர்க்கவிருக்கும் தொட்டி அல்லது பொருள் முழுவதும் மண்ணை நிரப்பாமல், அதன் மொத்த உயரத்தைவிட சற்று குறைவாக மண்ணை நிரப்ப வேண்டும். வெண்டை, கீரை, போன்றவற்றை நேரடியாக விதைக்கலாம். கத்தரி, தக்காளி, மிளகாய் போன்றவற்றிக்கு குழித்தட்டுகளில் நாற்று நடவுசெய்து அதன்பின் பெரிய தொட்டிகளுக்கு மாற்ற வேண்டும்.

மண்ணில் விதைகளை விதைப்பதற்கு முன்னர், ஆறுமணிநேரம் ஊற வைத்தால், விதையின் முளைப்புத்திறன் நன்றாக இருக்கும். விதையின் அளவைவிட இரண்டு மடங்கு அளவிற்கு குழி தோண்டி விதை விதைக்க வேண்டும்.

செடிகள் வளர்த்துவருபவர்கள் , செடியிலேயே காய்கறிகளை முற்றவிட்டு, அதிலிருந்து விதைகளைச் சேமித்து, சாம்பலுடன் கலந்து வைத்து தேவைப்படும்போது பயன்படுத்தலாம்.

தொட்டிகளை நேரடியாகத் தரையில் வைத்து வளர்த்தால், தரை பாதிக்கப்படும் என்பதால், தொட்டிகளை வைக்கும் முன், பிளாஸ்டிக் கவர்களையோ, கடப்பா கல், மரப்பலகைகள் போன்றவற்றை வைத்து அதன்மீது தொட்டிகளை வைக்க வேண்டும்.

மலையக மக்களுக்கு தனி இடம் இல்லை என்றால் குழுக்களாக பிரிந்து, கோவில், பாடசாலை போன்ற பொது இடங்களில் தோட்டம் செய்ய முயற்சி எடுங்கள்.








# மன்னாரில் பாரதி விழா



மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் பாரதி விழா, சனிக்கிழமை (23) காலை மன்னார் நகரசபை மண்டபத்தில் மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் மஹா தர்மகுமார குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் விருந்தினர்களாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல், வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் திருமதி ராஜ மல்லிகை சிவசுந்தர சர்மா, வவுனியா தமிழ் சங்கத்தின் ஸ்தாபகர் தமிழருவி த. சிவகுமாரன் உட்பட சர்வமத தலைவர்கள் அழைக்கப்பட்ட பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில், தமிழ்த் தாய் வாழ்த்து, நடனம், கவியரங்கம் உள்ளிட்ட சிறப்பு நிகழ்வுகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

(படங்களும் தகவலும் றொஸாரியன் லெம்பேர்ட்)











# கிராமிய நூலகங்களுக்கு நூல்கள்


கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் வருடா வருடம் செயற்படுத்தப்பட்டு வருகின்ற கிராமிய நூலகங்களுக்கு நூல்கள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், 2022ஆம் ஆண்டில் நான்கு பிரதேச செயலக பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஐந்து நூலகங்களுக்கு தலா 10,000.00 ரூபாய் பெறுமதியான நூல்கள் புதன்கிழமை (27) கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரனால் வழங்கிவைக்கப்பட்டன.

பூநகரி பொது நூலகம், கரைச்சி பொது நூலகம், கிளி/பளை மத்திய கல்லூரி நூலகம், கிளி/ பிரமந்தனாறு மகா வித்தியாலய நூலகம், கிளிநொச்சி மாவட்ட செயலக நூலகம் ஆகியவற்றுக்கு நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க. ஸ்ரீமோகனன், உதவி மாவட்ட செயலாளர். ஜெ.றெமின்ரன், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கா.இராசதுரை, கரைச்சி பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் வே. தர்மபாலன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

(படங்களும் தகவலும்: யது பாஸ்கரன்)











# ‘நஞ்சு மனிதர்’

சு. சந்திரகுமார் எழுதிய ‘நஞ்சு மனிதர்’ நூல் வெளியீடு ஞாயிற்றுக்கிழமை (24) மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. ஆரம்ப விவசாய செய்கை முறையும், தற்கால விவசாயத்தில் நஞ்சு பாவனையால் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து பேசும் நாடகத்தையும், ஆற்றுகையின் போது பெற்ற அனுபவத்தையும் உள்ளடக்கியதாக இந்நூல் அமையப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பட்டிப்பளை பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியமும் அடிப்புற அரங்கச் செயற்பாட்டு பேரவையும் இணைந்து நடத்திய இந்நூல் வெளியீட்டு நிகழ்வு த. மேகராசா தலைமையில் நடைபெற்றது.

நூலின் முதற்பிரதியை சி.வரதகரன் பெற்றுக்கொண்டார். வெளியீட்டு உரையை கவிஞர் அழகு தனு நிகழ்த்தினார். மதிப்பீட்டு உரையை முதுநிலை விரிவுரையாளர் க. மோகனதாசன் நிகழ்த்தியதுடன், ஏற்புரையை சு.சந்திரகுமார் ஆற்றினார்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பேராசிரியர் ஜீ. கென்னடி கலந்து கொண்டமையுடன், மேனாள் பேராசிரியர் சி. மௌனகுரு உள்ளிட்ட பேராசிரியர்கள், முதுநிலை விரிவுரையாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

(படங்களும் தகவலும்: வ. திவாகரன்)

















# சாதனையாளர் கௌரவிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பனிக்கன்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் புதன்கிழமை (27) மாலை நடைபெற்றது.

பாடசாலையில் அதிபர் தா. தயாகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், துணுக்காய் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் மாலதி முகுந்தன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். நிகழ்வில் மாணவர்களுக்கான நினைவு கேடயங்கள் நினைவுச்சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டன. வயலக்கல்வி அலுவலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், அயற் பாடசாலை அதிபர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பாடசாலையின் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

(படங்களும் தகவலும்: சண்முகம் தவசீலன்)

















# லண்டனில் சாரல்நாடனின் நூல் வெளியீடு

சாரல்நாடனின் ‘வானம் சிவந்த நாட்கள்’ என்ற நாவல் வெளியீடு லண்டனில் சனிக்கிழமை (16.4.22) விம்பத்தின் ஆதரவில் ஓவியர் கே.கிருஷ்ணராஜா தலைமையில் நடைபெற்றது. விமர்சகர் மு.நித்தியானந்தனிடமிருந்து இந்நாவலின் சிறப்புப் பிரதியை நூலகம் வலைத்தளத்தின் நிறுவனர் இ.பத்மநாப ஐயர் பெற்றுக்கொண்டார்.

கோகிலம் சுப்பையாவின் ‘தூரத்துப்பச்சை’, மு.சிவலிங்கத்தின் ‘பஞ்சம் பிழைக்க வந்த சீமை’ ஆகிய சிறந்த மலையக நூல் வரிசையில் சாரல்நாடனின் ‘வானம் சிவந்த நாட்கள்’ நாவலும் வந்து சேர்கிறது.

“தொழிற்சங்கத்தைக் கட்டிஎழுப்பும் போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகளின் உண்மைச் சம்பவத்தை வைத்து சாரல்நாடன் எழுதிய இந்நாவல் சமூக, வர்க்க, இன ரீதியில் ஒடுக்கப்பட்ட மலையைக் சமூகத்தின் போராட்ட வரலாற்றைப் பேசுகிறது” என்று இந்நாவல் பற்றிய விமர்சன உரையாற்றிய கோகுலரூபன் தெரிவித்தார்.

“ஒரு படைப்பாளியின் மறைவிற்குப்பின் அவரது ஆக்கங்களை கவனமாகப் பேணிப் பாதுகாக்காமையால் பல படைப்புகளை நாம் இழந்திருக்கிறோம். மஹாகவியின் மறைவிற்குப்பின் அவரது துணைவியார் பத்மாசினி, கணவரின் அனைத்து எழுத்துகளையும் பேணிப்பாதுகாத்தமை பாராட்டவேண்டிய செயற்பாடாகும். அதே போன்று புஷ்பா சாரல்நாடானும் தனது கணவரின் எழுத்துகளைப் பாதுகாத்து நூலாகும் முயற்சியில் ஈடுபாடுகாட்டியதற்கும், இந்நூலைப் பதிப்பித்த விக்ரமசிங்கவின் அயராத செயற்பாட்டுக்கும் இலக்கிய உலகம் நன்றிகூறுகிறது” என்று ‘பனிமலர்’ ஆசிரியர் நா.சபேசன் தனது உரையில் குறிப்பிட்டார்.


நா.சபேசன்


கோகுலரூபன்


மு.நித்தியானந்தன் சிறப்புப் பிரதியை இ.பத்மநாப ஐயரிடம் கையளிக்கிறார்




விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் சனிக்கிழமை, 30 ஏப்ரல் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.